விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 10 ஷவ்வர 15 இதழ் 133

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24-6-1986

## சர்வகட்சி மகாநாடு:
# 'தமிழ் காங்கிரஸ்' கட்சி பங்குகொள்ளக்கூடாது
## குமாருக்கு அவசர தந்தி

யாழ்ப்பாணம் திங்கள் ''ஜனாதிபதி ஜயவர்த்தன நாளை புதன்கிழமை கூட்ட விருக்கும் சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றுவதென திரு. குமார் பொன்னம்பலம் எடுத்தமுடிவு கவலைக்குரியதும் தவறானதொரு நடவடிக்கையுமாகும்'' என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து திரு. கனகநாயகம் தந்தியொன்றையும் திரு. குமார் பொன்னம்பலத்துக்கு அனுப்பிவைத்துள்ளார். அத்தந்தியில் 'சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றுவதென எடுத்த முடிவை மாற்றி அம் மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம்' என்று அவர் கேட்டுள்ளார்.

கடந்த 22-ந் திகதி 'ஈழ

[8ம் பக்கம் பார்க்க]

## பூநகரி - நாச்சிக்குடாவில்
# மீண்டும் ஒரு கடல் பயங்கரம்
# 34 பேர் பலி என அச்சம்!

### டாக்டர்கள் பற்றுக்குறை

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரியில் டாக்டர்கள் பற்றுக்குறை நிலவுகின்றது.

## சடலங்கள் கரை ஒதுங்குகின்றன!!

(நமது நிருபர் ஏ. தேவராஜா)

வடபகுதி கடற்பிரதேசத்தில் நேற்று முன்தினம் மீண்டுமொரு படகுப் படுகொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 34 பேர் கொலையுண்டிருக்கலாமென அஞ்சப்படுகின்றது. கடந்த இரு வாரங்களில் இடம்பெற்றுள்ள இந்த இரண்டாவது கொடூரச் சம்பவம் மன்னார் கடற்பகுதியில் நாச்சிக்குடா அருகே நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை 21-ந் இந்தியாவுக்குச் சென்ற சுமார் திகதி குருநகர் துறைமுகப் 34 அகதிகளே நாச்சிக்குடா பகுதியிலிருந்துவில் கொலையுண்டிருப்பதாக அறியப்படுகிறது.

இந்த அகதிகள் சென்ற 'அன்னைமேரி' என்ற படகும் நாச்சிக்குடா பகுதியில் துப்பாக்கி வேட்டுக்களால் துளை

(8ம் பக்கம் பார்க்க)

## செய்திப் பலகை அறிக்கையில்....

[காரியாலய நிருபர்]

'அன்னை மேரி' என்றபடகில் அகதிகளாகப் புறப்பட்டவர்கள் கோரமாக கொல்லப்பட்டுள்ளனர். இவர்களின் சடலங்கள் பள்ளிமுனையில் கரை ஒதுங்கியுள்ளன.

அகதிகளாகப் புறப்பட்டவர்களில் 5 பெண்களும் 10 ஆண்களும் அடங்குவர்.

'புலிகளின் குரல்' என்ற செய்திப்பலகையில் நேற்று இத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யாழ் நகரிலுள்ள முக்கிய சந்தியில் காணப்பட்ட செய்திப்பலகையில் இச்சம்பவம் பற்றி தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''அன்னைமேரிஎன்ற தோணியில் அகதிகளாகப் புறப்பட்ட 5பெண்களும் 10 ஆண்களுமே கோரமாக கடற்படையினரால் கொலைசெய்யப்பட்டனர்''

கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்கள் பள்ளிமுனையில் கரைஒதுங்கியதென்றும் அந்தசெய்திப்பலகையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. [க]

## வவனியாகாடுகளில் பலத்த தேடுதல்

வவனியா, திங்கள் வவனியாமாவட்டத்திலுள்ள தடைசெய்யப்பட்ட காட்டுப் பிரதேசங்களில் கடந்த இரு தினங்களாக ராணுவத்தினர் பலத்ததேடுதல் நடத்தினர். வவனியா மாவட்டத்தின் முக்கிய வனப் பிரதேசங்களான கொந்தக்காரகுளம், கோழியாக்குளம், பாலைமோட்டை, கல்மடு ஆகியவையே இவ்வாறு பலத்த தேடுதலுக்குள்ளாக்கப்பட்டன.

தீவிரவாதிகளைத் தேடியே இவ் வேட்டைமேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதனிடையே தேடுதல் நடத்தப்படும் இப்பிரதேசங்களில் ஏதும் அசம்பாவிதம் நடந்துள்ளதா என்பதுபற்றிய செய்திகள் இதுவரைகிடைக்கவில்லை.

## நாவற்குழி தாக்குதல்——
# இராணுவ தரப்பில் பத்துக்குமேல் பலி
### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம் செவ்வாய் ''மக்கள் விடுதலைப் படை போராளிகள்நேற்றுநாவற்குழி முகாமிற்கு மிக அண்மையில் நிலைகொண்டுநடத்திய மோட்டர்தாக்குதலில்பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் இறந்ததாக தகவல் கிடைத்துள்ளது. கொல்லப்பட்டவர்களின் உடல்கள் விரைந்து வந்த ஹெலிகொப்டரில் கொழும்புக்கு அனுப்பப்பட்ட''

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

[8ம் பக்கம் பார்க்க]

## தொண்டமானாறு குடிமனைப்பகுதியில் 'ஷெல்' தாக்குதல்

அச்சுவேலி திங்கள் இராணுவ முகாமில் இருந்து நேற்றிரவு ஏவப்பட்ட 'ஷெல்' ஒன்று தம்பாலைச் சந்தியில் விழுந்து வெடித்ததில் வீடொன்று சேதமுற்றதுடன் அதன் அருகில் இருந்த தென்னைமரமொன்றும்முறிந்து விழுந்தது.

(8ம் பக்கம் பார்க்க)

## பீரங்கி தாக்குதல்

யாழ்ப்பாணம் செவ்.

ஆனையிறவு முகாமிலிருந்து நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு பீரங்கித்தாக்குதல் நடைபெற்றது. இத்தாக்குதல் பிற்பகல் 2 மணிக்கு பின்னரும் நீடித்தது.

ஆனையிறவிலிருந்து ஏவப்படும் ஷெல்களும், கிளிநொச்சியிலிருந்து ஏவப்படும் ஷெல்களும், பரந்தன் சந்தியில் தொடர்ந்து விழுவதால் அப்பகுதியிலுள்ளவர்கள் வெளியேறியுள்ளனர்.

நேற்றும் பஸ்கள் உட்பட சகல வாகனங்களும் கிளிநொச்சிஊடாக செல்லவில்லை.

வாகனங்கள் யாவும் முல்லைத்தீவு ஊடாகவே வவனியா செல்கின்றன. (க)

## நயினாதீவு——
# தீர்த்தக்கேணிக் கரையில் தலையில்லா ஆணின் சடலம்

வேலணை திங்கள் கடந்தவெள்ளியன்று நயினாதீவுதெற்குகடற்கரையைஅண்டியுள்ள தீர்த்தக்கேணிகரையில் இனம் தெரியாதநிலையில் ஒருகாலும் தலையும் இல்லாத சுமார் 32 வயது மதிக்கத்தக்க ஆணின்சடலம் ஒன்று கரை ஒதுங்கிக் காணப்பட்டது.

இச் சடலத்தைக்கண்ட நயினாதீவு மக்கள் அங்குள்ள அரசாங்க அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துவிட்டு அச்சடலத்தை சைவசமய முறைப்படி தகனம் செய்தனர்.

## சென்னையில் ரயில் விபத்தில் யாழ்.வாசி பலி

[சென்னை திங்கள்' யாழ்ப்பாணம் அரசடி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு பசுபதி [23வயது] இரு தினங்களுக்கு முன்னர் சென்னையில் இடம் பெற்றரெயில்விபத்தொன்றில் இறந்துள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள அவரது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது ஒருவருடத்திற்கு முன்கனடாவிற்குச் செல்வதற்காக ஏஜென்ஸி ஒன்றின்மூலம் சென்னை சென்ற இவர் இரண்டு தினங்களுக்குமுன் சென்னையில் நடந்த ரயில்விபத்தில் இறந்துள்ளார்.

[வவ. நிரு]

## நன்னடத்தை பாடசாலை தகர்ப்பு!

அச்சுவேலி திங்கள் அச்சுவேலியிலுள்ள சிறுவர் நன்னடத்தைப் பாடசாலை [பென்ஹாம் பாடசாலை] நேற்று குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

தமிழ்ப்பிரதேசத்தின் ஒரேநன்னடத்தைப் பாடசாலையாக விளங்கிய இப்பாடசாலை

(8ம் பக்கம் பார்க்க)

## புனித இயக்கங்களுக்கு மிகவும் பணிவான வேண்டுகோள்

எனது ஸ்தாபனத்திற்கு பளையைச் சேர்ந்த தருமலிங்கம் என்பவரின் 26ஸ்ரீ 6305 இலக்க நம்பர் லொறியில் கொழும்பிலிருந்து யாழ். நகருக்கு ஏற்றி வந்த பொருட்களான கைக்கோ, ஈஸ்ட், சவர்க்காரம், தீப்பெட்டி, மீன்ரின் ஆகிய பொருட்களுடன், 14-6-86 ல் விஸ்வமடு றெட்பானாவுக்கு அருகாமையில், இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டது. இப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாக இருப்பதினால் பொதுமக்களின் நலன்கருதி இதில் புனித இயக்கங்கள் தலையிட்டு மீட்டுத்தந்து உதவுமாறு மிகப்பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
எஸ். வி. முருகேசு.

[C-3059]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ ரூபா 250/. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (C 3004)

Auto Zooming Auto Forgus Title ஆகிய தன்னியக்க வசதிகள் உடைய மிக அண்மையில் அறிமுகமான J. V. C. Video Camera (Model No. GX. N. 70E) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: "ரெலிகோணர், சாவகச்சேரி", C 3037)

சுத்தமான பொக்கட் நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: நியூ பாமசி, ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். [C 3045]

ஆனைக்கோட்டை உபதபாற் கந்தோருக்கருகாமையில் 2 பரப்புக் காணி சிறு வீட்டுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: க. சண்முகம், "திருமகளகம்", கூளாவடி லேன், ஆனைக்கோட்டை. (C 3047)

நல்ல நிலையிலுள்ள Honda MB 8 விற்பனைக்குண்டு. தொடர்பு: T. ஜெகதீசன், 131/4, பருத்தித்துறை வீதி. நல்லூர் (நல்லூர் நூல்நிலைய அருகாமையில் உள்ள ஒழுங்கை) (C 3044)

### தவறிவிட்டது

இல. 550662185 V. மார்க்கண்டு இரவீந்திரராஜா, 85, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம் என்பவருடைய அடையாள அட்டை மானிப்பாய் அந்தோனியார் கோவிலடியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் இல 50, ஆசாரியார், கடைச்சல் பட்டறை, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்தசன்மானம் வழங்கப்படும். (C 3051)

இல. 672151031 V இம்மானுவேல் போல் செல்ரன் எடிசன், நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 3052)

கிருஷ்ணர் முருகதாஸ், தொல்புரம் சுழிபுரம் என்பவருடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். 'மாபிள்ஸ்', இல. 42, நவீனசந்தை, யாழ்ப்பாணம். (C 3053)

### தேவை

புதிதாக அமைக்கப்பட்ட Green Chinese Restaurant க்கு உடனடியாக வேலைக்கு Stewards, Receptionist (Female) ஆட்கள் தேவை. அனுபவமுள்ளவர்கட்கு முதலிடம் கொடுக்கப்படும். வயது 22-30க்கு இடைப்பட்டவராய் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களுடன் நேரில் வரவும். ஹோட்டல் ஞானம்ஸ், 299, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (A 866)

## வைத்தியம்

மூலரோகங்கள், வாதரோகங்கள், சருமரோகங்கள், எக்ஸிமா, தொய்வு, பீனிசம், தலைவலி, முடியுதிர்வு, அகால நரை, நரம்புத்தளர்ச்சி, நீரழிவு, மாதவிடாய்கால வேதனைகள், மகப்பேறின்மை, குழந்தைகட்குசித்தஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. R. மங்களாம்பிகை D, A. M. Dr. R. இலக்ஷ்மண ஐயர் D,A.M., மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரகுளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, சங்கிலியன்வீதி, நல்லூர். (C2570)

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், (வரைவுள்ளது). சுன்னாகம்.

## அறிவித்தல்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 1000ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனியும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-ம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-ம் மீளளிப்பு வைப்புப்பணமாகச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் 30-6-86 நண்பகல் 12-00மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.
23-06-1986. [A-867]

## 2-வது ஆண்டு அன்பின் நினைவு



**திருமதி குருசுமுத்து அருளம்மா**

மண்ணிலுதித்த பொன்னாள்: 4- 8- 1912
விண்ணையடைந்த திருநாள்: 24- 6- 1984


எமதெண்ணமெல்லாம் உமதாக்கிக் கொண்டு விண்ணகம் சென்றுவிட்டாய் ஆனால் மண்ணினில் எம்மோடு வாழ்ந்த காலங்களை இரை மீட்கும் போது என்றும் எம்முள் வாழ்வதை உணர்கின்றோம். எம் கண்களை விட்டகன்ற இந்நாளில் உமது ஆத்தும இளைப்பாற்றுக்காக யேசுவிடம் வேண்டுதல் செய்கிறோம்.

நினைவு கூரும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

27, 2-ம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம். (C3034)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## முதலாவது நினைவஞ்சலி



**திரு. க. செல்லையா**

[அதிபர், அளவெட்டி தெற்கு, அளவெட்டி.]

மலர்வு: 5- 12- 1936
உதிர்வு: 24- 6- 1985
திதி: 13- 7- 1986

அருமைத் தெய்வமே
ஆருயிரே எமது ஐயா
இன்முகம் காட்டி
ஈகைபல செய்தீரே
உத்தமனாய் வாழ்ந்து
ஊர்சிறக்க வைத்தீரே!
எக்கருமம் என்றாலும்
ஏணியாய் நின்றிடுவீர்
ஐயம் மறந்தறியீர்
ஒளிவிளக்காய்
குடுபத்தில்
ஓங்கிச் சுடர்விட்டீர்
ஔடதமாய்
எமக்கெல்லாம்
ஆறுதல் கூறுமுன்னே
கூற்றுவன் குறுக்கிட்டு
கொடுமை புரிந்து
விட்டான்.

தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மகள்மார், உற்றார், உறவினர். [C 3031]

## பின் முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை புலோலி மேற்கு 1-ம் கட்டையடி பிற்காலம் சிங்கப்பூர் சாங்யொங் செமந்து கம்பனியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் சிவநாதன் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்
—மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் Testy/1226

சுப்பிரமணியம் சிவநாதன் கைம்பெண் ரஞ்சிதகௌரி, 1-ம் கட்டை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.
—மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் சொத்துக்களை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதற்கிணங்க பின்முற்றுகும் கட்டளையை பதியப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப் டுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1986-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ந் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றின் முன் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார். 1985-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 11-ந் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி

ஒப்பம்
ச. நடராசா,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

வரைவு:
ஒப்பம்
மு. க. முத்துக்குமார்,
மனுதாரின் சட்டத்தரணி.
(A 862)

## வர்த்தகக் கல்லூரி, இளவாலை.

### பெண்களுக்கான 2 மாத கால துரிதபயிற்சி!

1. நவீன முறையில் உடை தயாரித்தல்.
2. சிகையலங்காரம்.
3. கேக் அலங்காரம்.
4. பொதுமுறை உணவு தயாரித்தல்.

தனிப்பட்ட பாடமாகவும் பயிலலாம்.
பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ஆரம்பம்: 04-07-1986
நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

அதிபர்,
**வர்த்தகக் கல்லூரி,**
அகஸ்தர் லேன், இளவாலை. (C 3043)

## நினைவில் வைத்திருங்கள்

### பாதுகாப்பான இடம்

ரம்மியமான சூழலில்
உல்லாசமாக பொழுதைப் போக்கவும்,
சாப்பாட்டு வகை, குளிர்பான வகை,
மதுபானவகை, நவீன அறைகள்
இவை யாவற்றுக்கும்
விசேஷ கழிவுடன் உங்கள் வரவை எதிர்பார்க்கின்றது.

# HOTEL GNANAMS,

299, Clock Tower Road, Jaffna.

தொலைபேசி: 22087, 23067

(A 750)

## செங்கல் தொழிற்சாலை

வவனியா, திங்கள் சூடுவெந்தபிலவு கிராமோதய சபைப்பிரிவில் உள்ள குருக்கள் ஊர் என்ற இடத்தில் அண்மையில் பாலர் பாடசாலை ஒன்றும் செங்கல் தொழிற்சாலை ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

## ஒத்துமாறல்

கொழும்பு-13 பகுதியில் கற்பிக்கும் கலைப்பட்டதாரி ஆசிரியர் முல்லைத்தீவு அல்லது கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒத்து மாற விரும்புகிறார்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
K. SRISKANDARAJA,
64, St. Benedicts Mawatha,
Colombo- 13.
[C 3035

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணப் பட்டணம் என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற திருமதி ரேஸ் பாக்கியம்ஸ் வில்லியம்ஸ் என்பவரது மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்
மரணமெய்திவர்.

பிரான்சிஸ் ராஜகுமார் சிரத்தினம், தற்பொழுது 41, புறூக்ளி வீதி, ஒன்ரேறியோ கனடா, இவரின் தத்துவகாரி திருமதி நிமலாதேவி ஜோசெப், 20, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம்.
மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் இல:T/3971

எதிராக

1. ஜோன் ஜோசப் தம்பிராசா, 19, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
2. வீரகத்திப்பிள்ளைடேவிட் வீரக்கோன், 12, ரேசினி வீதி, கொழும்பு 6.
3. வீரகத்திப்பிள்ளை உவெஸ்லி ஞானக்கோன், 22, பொஸ்வல் பிளேஸ், கொழும்பு 6.
4. டாக்டர் ஜோசப் சிறிபாலன் வில்லியம்ஸ் ஜெயரத்தினம், தேம்சயிட் பெரிய ஆஸ்பத்திரி லேம்ஷயர், இங்கிலாந்து.
5. எவ். பி. ஆர். சுந்தரம் பிள்ளையும், பெண்
6. ஹோப் யோகேஸ்வரியும் இருவரும் 78/3 டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை, கொழும்பு 6.

எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு ஆடி மாதம் 11ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1986ம் ஆண்டு வைகாசி மாதம் 26 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
C 3023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்னை தீர்வுக்கு தமிழ்ப் பகுதிகளிலிருந்து

# ராணுவத்தை அரசு வாபஸ் பெறவேண்டும்

## சென்னையில் போராளிகளை சந்தித்தபின் குமாரணதுங்க வெளியிட்ட கருத்து

சென்னை, ஜூன் 23

''இலங்கை அரசு தமிழ்ப் பகுதிகளில் குவித்துவைத்திருக்கும் இராணுவத்தை உடனடியாக வாபஸ்பெற வேண்டும்'' என்று இலங்கை மக்கள் கட்சி செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

திரு. விஜயகுமாரணதுங்க இலங்கை தமிழ்ப்போராளிகள் குழுக்களான ஈழமக்கள்புரட்சிகரஅமைப்பு, தமிழீழவிடுதலைப் புலிகள், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய அமைப்புக்களை நேற்று முன்தினம் சென்னையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். இதனைத்தொடர்ந்து நிருபர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும்போதே இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இராணுவத்தை தமிழ்ப்பகுதிகளிலிருந்து அகற்றுவதன் மூலமே இனப் பிரச்னைக்கான சமாதானத் தீர்வினைக் காண முடியும் என்றும் திரு. குமாரணதுங்க அங்கு தெரிவித்தார்.

போராளிகள் அமைப்புக்களுடனான சந்திப்பின்போது மேற்படி கட்சியின் துணைத் தலைவர்களான திரு ஓ. ஏ. குணசேகர திருமதி சந்திரிகா குமாரணதுங்க ஆகியோரும் உடனிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ரா)

## ஸ்பெயினில்சோஷலிஸ்ட்கட்சி அமோக வெற்றி

லண்டன், ஜூன். 23

ஸ்பெயினில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் சோஷலிஸ்ட் கட்சி அறுதிப் பெரும்பான்மை இடங்களைப் பெற்றுள்ளது.

இதுவரை 69 சதவீத வாக்குகளின் முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முடிவுகளின்படி பிரதமர் திரு பெலிப்பே கன்சால்ஸ் தலைமையிலான சோசலிஸ்ட் கட்சி 186 இடங்களைப் பெற்றுள்ளது திரு. மனுவல் பராகா தலைமையிலான முக்கிய எதிர்க்கட்சியான கன்ஸவேட்டிவ் கூட்டணி 99 இடங்களைப் பெற்றுள்ளதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## யாழ், -கீரிமலை பஸ் சேவை நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், செவ்வாய்.

மினிவானையும், சாரதியையும் தாக்கியதால் கீரிமலை-யாழ்ப்பாணம் பஸ்சேவை நேற்று முன்தினம் நடைபெறவில்லை.

இளவாலைப் பகுதியில் ஒரு வீட்டில் சட்டவிரோத மின்பாவனையைத் துண்டிக்கச் சென்ற இளைஞர் கோஷ்டியை அவ்வீட்டார் தாக்கியதாகவும் அவ்வாறு தாக்கப்பட்ட இளைஞர் கோஷ்டி சட்டவிரோத மின்பாவனை செய்த வீட்டாருக்குச் சொந்தமான மினிவானையும், அதன் சாரதியையும் பதிலுக்குத் தாக்கியதாகவும், இதனாலேயே கீரிமலை-யாழ்ப்பாணம் மினிபஸ் சேவை நேற்று நடைபெறவில்லை என்றும் கூறப்படுகிறது. [ஐ]

## மண்டைதீவு சம்பவத்திற்கு சங்கம் கண்டனம்

வல்வெட்டித்துறை, திங்கள்

''அரசு தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான செயல்களில் ஒன்று மண்டைதீவில் மீனவர்கள் கறுப்புச்சட்டைக் கடற்படையினரால் கொன்றுகுவிக்கப்பட்ட படுகொலைகள். இவ்வித அராஜக செயல்களை ஒவ்வொரு அமைப்புகளும் சங்கங்களும் கண்டனம் தெரிவிப்பதுடன், உலக நாடுகள் அறியக்கூடிய வகையில் வழிவகுத்துச் செயற்பட வேண்டும்.''

இவ்வாறு வல்வை மீன்பிடியாளர் கடற்றொழில்விரிவாக்க சேவைசங்கம், வல்வை மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் திரு. ந வைத்திலிங்கம் மேற்படி சங்கத்தின் சுமார் அறுநூறு உறுப்பினர்கள் கலந்துகொண்டு மண்டைதீவில் நடைபெற்ற குருநகர் மீனவர்கள் கொலை குறித்து அனுதாபமும், கண்டனமும் தெரிவிக்குமுகமாக நடைபெற்ற அனுதாப கூட்டத்தில் கூறினர்.

மற்றும் சங்க செயலாளர்திரு. எஸ் சிவானந்தன் மற்றும் பலரும் உரையாற்றினர்.

## இந்திய ராஜதந்திரிகள் தாக்குதல் சம்பவம் விசாரிக்கப்படுமாம்

### பாக்கிஸ்தான் அதிபர் உறுதி

கராச்சி, ஜூன். 23

''இந்திய ராஜதந்திரிகள் மீது அண்மையில் லாகூரில் வைத்து தாக்குதல் நடத்திய சந்தேகநபர்கள் மீதான விசாரணை உடனடியாகமேற்கொள்ளப்படும்'' என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் உறுதியளித்துள்ளார்.

இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவரான திரு. என். கே. பி. சால்வேக்கும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஷியாவுல் ஹக்கிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுமுன் தினம் கராச்சியில் இடம் பெற்றது. இச் சந்திப்பின் போதே ஜெனரல் ஷியா இந்த உறுதயினைஅளித்துள்ளார்.

விசாரணையின் போது சந்தேக நபர்கள் குற்றவாளிகள் எனக் காணப்படும் பட்சத்தில் அவர்கள் மீதான தண்டனை நடைமுறைப் படுத்தப்படும் எனவும் திரு. ஷியா தெரிவித்தார். [ரா]

உலகச் செய்திகள்

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு பலர் பலத்த காயம்

கராச்சி, ஜூன். 23

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை மாகாணத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவம் ஒன்றில் 20 பேர்படுகாயமடைந்துள்ளனர். 16 பேரின் நிலைமை கவலைக்கிடமான நிலையிலுள்ளது.

தலைநகரான பெஷாவர் மத்தியமலைப்பகுதியிலேயேநேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இக்குண்டு வெடிப்புச்சம்பவம் பொலிஸ் நிலையமொன்றின் வெளிப்பகுதியில் இடம்பெற்றதாக கூறப்பட்டது.

கடந்தவாரம் இப்பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 10 பேர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் பலர் பலத்த காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (ரா)

## காங்கேசன்துறையில் சீனி இறக்கும் வேலைகள் ஆரம்பம்

மாவிட்டபுரம், திங்கள்

வடபகுதி சீனித் தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட சீனியை இறக்கும் வேலைகளில் ஏற்பட்ட இழுபறி நிலை நீக்கப்பட்டு நேற்று முன்தினம் சீனி இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின. ஏராளமான ப. நோ. கூ. சங்கங்களின் லொறிகள் சீனியை எடுத்துச் சென்றன.

வடபகுதி சீனித் தட்டுப்பாட்டை நீக்க யாழ் அரசாங்க அதிபரும், உணவு கட்டுப்பாட்டு இலாகாவினரும் எடுத்த முயற்சியால் 950 தொன் சீனி ''மேர்ச் மாத்தறை'' என்ற கப்பலில் கடந்த 20 ம் திகதி காங்கேசன் துறைத் துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டது. ஆனால் உணவுக்கட்டுப்பாட்டு திணைக்களத்தால் சீனியை இறக்கும் வேலைக்காக அனுமதி வழங்கப்பட்ட நிறுவனத்திற்கு துறைமுகத்தில் நுழைந்து சீனி இறக்கும் வேலைகளைக் கவனிக்க சில இடையூறுகள் ஏற்பட்டதையடுத்து அவ் வேலைகள் தடைப்பட்டன.

இதையடுத்து மேற்படி சீனி இறக்கும் முகவர் யாழ் அரசாங்க அதிபருடன் நேரில் தொடர்புகொண்டு நிலைமையை தெரிவித்தார். பின்னர் வேலைக்கான முகவரின் பெயர் மாற்றப்பட்டு சீனி இறக்குமதி வேலைகள் நேற்று முன்தினம் துரிதமாக நடைபெற்றன.

## அஞ்சலிக் கூட்டமும் நிதிஉதவியும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். குருநகர் புதியசந்தை வர்த்தகர் சங்கம் மண்டைதீவில் பலியான மீனவர்குடும்பங்களுக்கு நிதியுதவியாக 8005/-ரூபாவை கடல்தொழில் அபிவிருத்திச் சங்கத்திடம் கையளித்துள்ளது.

சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் தலைவர் செ. அல்போன்ஸ் தலைமையில் நடைபெற்றது அங்கு மண்டைதீவு கடற்பிராந்தியத்தில் ஆயுதப்படையினரால் கொலைசெய்யப்பட்டவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

## சப்பற வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம் செவ்

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவல் பிள்ளையார் ஆலயத்திற்கு புதிதாக அமைக்கப் பெற்ற சப்பற வெள்ளோட்டம் புதன்கிழமை மாலை3மணிக்கு நடைபெறும். இப் புதிய சப்பறம் திருநெல்வேலியைச் சேர்ந்த ''விநாயகர் சிற்ப ஸ்தபதி'' சிற்பக் கலைஞர் திரு. சு. இரத்தினம் தலைமையில் ''அவர்களது குழுவினரால் உருவாக்கப்பட்டது.

## கிளிநொச்சியில் எட்டு வங்கி ஊழியர்கள் இராணுவத்தால் விசாரணை

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி இலங்கை வங்கி முகாமையாளர் உட்பட அங்கு கடமையாற்றும் எட்டு ஊழியர்கள் இராணுவத்தினரால் கிளிநொச்சியில் சில மணி நேரம் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டதைத் தொடர்ந்து வங்கி ஊழியர்கள் கடமைக்குச்செல்ல அச்சம் தெரிவித்துள்ளனர்

இதேவேளை கடமைக்குச் சென்ற கச்சேரி மற்றும் அரச திணைக்கள ஊழியர்கள் இராணுவக் கெடுபிடிகள் காரணமாக வரவு இடாப்பில் ஒப்பமிட்டபின் யாழ்ப்பாணம் திரும்பினார்கள்.

இப்பகுதிப் பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டே கிடக்கின்றன. கச்சேரியை இடமாற்ற எடுத்த முயற்சியை பாதுகாப்புப்படையினர் தடுத்துநிறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் தொடர்ந்து 20 தினங்களாக கடைகள், தொழிற்சாலைகள் மூடப்பட்டுக்கிடக்கின்றன கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவும் தொடர்ந்து மூடப்பட்டுக் கிடக்கிறது. இங்கு கடமையாற்றுவோரும் இதுவரை வேலைக்குத்திரும்பவில்லை.

## மயானம் திருத்தம்

உடுவில், திங்கள்

உடுவில் மயானம் தாவடி பூவோடை மயானம் ஆகியவை தற்சமயம் திருத்தப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகம் இத்திருத்த வேலைகளுக்காக அறுபத்தையாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

## பஞ்சாப் நிலைமையைக் கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பர்னலாவுக்கு வேண்டுகோள்

அமிர்தசரஸ், ஜூன் 23

அமிர்தசரசில் இனந்தெரியாத நபரொருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியாகியுள்ளார். இவர் கிராமஅமைப்பின் முன்னாள் தலைவர் என்று கூறப்பட்டது

நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இன்னுமொரு சம்பவத்தில் ஒரு சீக்கியகிளர்ச்சியாளர் பொலிசாரால்சுட்டுக் கொல்லப்பட்டதுடன் ஒரு துப்பாக்கிஉட்பட தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த சனிக்கிழமை பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒருசீக்கியரின் இறுதி ஊர்வலத்தில் கட்டுக்கடங்காத சனக்கும்பல் கலந்துகொண்டுள்ளது. இவ்வூர்வலத்தின் போது கல்வீச்சு சம்பவங்களும், தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றதாகவும், இவைகளை கட்டுப்படுத்துவதற்காக பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

பஞ்சாப்பில் தொடரும் இந்நிலைமைகளை முறியடிக்கும் வகையில் தக்க நடவடிக்கைகளை வன்மையான முறையில் மேற்கொள்ளும்படி மத்திய அமைச்சர் திரு. பூட்டாசிங் பர்னலாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பேசிய பேச்சு உனக்கு எஜமான்.
பேசாத பேச்சுக்கு நீ எஜமான்.

— ஆபிரகாம் லிங்கன்.

## நமது நோக்கு

### மனக்கவலைக்கு மருந்து

‘உலக வரலாறு’ என்ற சிறந்த நூலை சிறையிலிருக்கும்போது எழுதினுன் சேர் வால்டர் ரலே. தூக்குமேடை அழைத்துக்கொண்டிருக்கும்போது நினைவுக் குறிப்புக்களை எழுதினுள் திருமதி ரோலந்து. ‘சுவர்க்கம் இழத்தல்’ ‘சுவர்க்கம் பெறுதல்’ என்ற இறவாக் காவியங்களை எழுதினுன் ஆங்கிலக்கவி மில்ட்டன் பார்வை இழந்த பின்!

எமது பாரதத்தில் இவ்வித அற்புதங்களுக்கு குறைவிருக்கவில்லை. ‘கீதா இரகசியம்’ என்ற நூலை மண்டலே சிறையில் வாடும்போது எழுதினுர் தேசபக்தர் திலகர் விடுதலைவீரர் சிதம்பரம்பிள்ளை சிறையில் செக்கிழுத்து வாழ்ந்தபோது, அரிய தமிழ் நூல்களை எழுதினுர். வெள்ளையன் கெடுபிடிக்குத் தப்பி பாண்டிச்சேரியில் அடைக்கலம் புகுந்த மகாகவி பாரதி, உலகின் பெருந்தலைவர் இந்தியாவின் முதற்பிரதமர் நேரு, பண்டைய பாரதத்தின் புகழேந்தி, காளமேகம் போன்றவரின் வீரச்செயல்கள் துன்பத்தின் உச்சியிலிருந்து இயற்றப்பட்ட சாதனைகள்.

இந்தச் சிறிய அழகான நாட்டை— பரம்பரையாக நல்ல மக்கள் வாழ்ந்துவந்த நாட்டைக் குட்டிச்சுவராக்கும் இன்றைய காட்சி சொல்லொணுக் கண்ணுவி. நாம் என்றும் கண்டிராத துன்பம்.

அரசியலால் ஏற்பட்ட அழிவு இனங்களுக்கிடையே குரோதத்தை வளர்த்து வருவதுதான் துன்பத்தின் முக்கிய அம்சம். இந்தியாவின் இந்து—முஸ்லிம் பிணக்குப்போன்று இலங்கை இதுகாறும் தடுமாறித் தத்தளிக்கவில்லையே!

இந்திய சுதந்திரத்துக்கு பாகிஸ்தான் உருவாக வேண்டுமென்ற நிலைபற்றிய விடயம் வரலாற்று ஆராய்ச்சிக்குரியது. ஜின்னுவின் பிடிவாதம் என்று மிகச் சிம்பிளாகச் சொல்லுபவர்கள் பெரும் சிந்தனையாளர்களா?

இந்தச் சிறு நாட்டில் எழுந்த தகராறு உலக அரசியலில், உலக பயங்கரவாதத்தில்கூட இடம்பெறுமளவிற்கு இவ்வளவுதூரம் அழிவுப்பாதையிலே பிடிவாதமாக இருப்பதற்குப் பொறுப்பானவர்கள் யார்?

‘செங்கண்மாரி’ போன்ற உள்ளூர் பிரச்னை இன்று மங்கண்மாரியாகி நாடனைத்தையும் பீடித்திருப்பது யாராலே?

கைப்புண்ணுக்குக் கண்ணுடி வேண்டுமா? இந்தியாவில் ஒரு பஞ்சாப். இலங்கையில் தமிழர் பிரச்னை. இந்தியாவின் உறுதிப்பாட்டை மட்டுமல்ல ஆசியாவின் பலத்தையுமே பாதிக்கும்வகையில் வெளிச்சக்திகள் ஈடுபட்டுவருவதாக இந்திய வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கர் தெரிவித்திருக்கிறுர். இது ஒரு புதுத்தான கண்டுபிடிப்பல்ல. காலஞ்சென்ற இந்திரா காந்தியும் இன்றைய இந்தியப்பிரதமர்ராஜீவும்மிகத் தெளிவாகச் சொல்லிவரும் கருத்து இது.

உள்நாட்டு விவகாரம் உக்கிரப்பட்டு ‘போர்’ நிலை அடைந்தபோதும் அது இலங்கையின் பிரச்னையே என்ற கொள்கையை அரசியல்ஞானத்திலும் ஜனநாயக மரபிலும் முன்னிற்கும் அமெரிக்காவும் பிரிட்டனும் பாராயணம்பண்ணி வந்தன.

தமிழர் பயங்கரவாதத்தை, தமிழர் விடுதலைப் போர் என்று கருதிய இந்தியா, சமாதான முயற்சியில் ஈடுபட்டபோது, அந்தப் பெருமுயற்சி இந்தியாவுக்கே உரியதென்று ஒரு கையால் தட்டிக்கொடுத்து மறுகையால் தமிழ் சமூகத்தை ஒழித்துக் கட்ட முயலும் இன்றைய இலங்கை அரசுக்கு ஆதரவு அளிக்கின்றன.

தென் ஆபிரிக்கா பற்றி இவ்விருவரும் - அமெரிக்காவும் பிரிட்டனும் கொண்டிருக்கும் நயவஞ்சகம் இனவெறிகொண்ட அந்த அரசுக்கு எதிராக எதனையுஞ் செய்யத் தயங்குவது எங்கள விவகாரத்தை நன்குவிளக்குகிறது. இலங்கைத் தமிழர் ஒரு பெரிய சாதி, சமூகம். அதன் அழிவைத் தடுக்க வேண்டுமென்ற ஆர்வம் இல்லாதபோதும், அமெரிக்க, ஆங்கிலேய மக்கள் இன்று போராடும் தமிழர்களுக்கு அனுதாபம்கொண்டிருந்தபோதும், சிக்கல்மேல் சிக்கலாகும் உலக அரசியலில் தங்கள் அரசு எவ்வாறு தப்பிக்கொள்ள வேண்டுமென்பதே இவ்வரசுகளின் முதல்நோக்கம். இலங்கைத் தமிழினத்துக்கு விக்கல் ஏற்பட்டால் அது அவர்களுக்குப் பிரமாதமாகுமா?

இன்று வீராவேசத்தோடு போர்புரியும் தமிழ்இளைஞர் இதனை நன்குணர்ந்திருப்பது, இன்றைய போலிச் சமாதான எத்தனங்களுக்கு செருப்படி கொடுக்கின்றது.

மெல்லெனப் பாயும் தண் (கண்) ணீர் கல்லையும் உருவிச் செல்லும். நெப்போலியன், நெல்சன், ஏன் ஜே.ஆரின் அபிமானம் பெற்ற சேர்ச்சில் போன்ற வீரத் தளபதிகள், தலைவர்கள் விளையாட்டுப்போல் வெற்றிவாகை சூடவில்லை. பிரபல கல்லூரிகளால் அவர்கள் உருவாக்கப்படவில்லை. பெரும் பட்டதாரிகளோ அல்ல. அரசியல் நிபுணர்களும் அல்ல..

தெளிந்த செயலில் முனைந்து என்றும் மனங்கலங்காது தங்கள் மக்களின் மனக்கவலைக்கு மருந்து கண்டனர்.

### கத்தோலிக்க மாணவ ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம் செவ் அருட் சகோதரன் ஜேன் சொஸ்லூஸ் இராணுவத்தினரால் கொடூரமாகக் கொல்லப்

(7ம் பக்கம் பார்க்க)

# கிராமத்து வீதிகளில் ஆடு, மாடு ஓடினுல் ‘ஹெலி’ வருவதாக அர்த்தம்!

## அரச நிவாரண உதவிகள் மீனவரை திருப்தி செய்யவில்லை

களஆய்வு:

தீக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

அந்த மினிவான் வண்டி தாளையடி செல்வதற்குப் பருத்தித்துறை மருதடி பஸ் நிலையத்தில் களைப்பாறியது.

போக்குவரத்துக்கள் அருகி இருந்தமையால் தாளையடிப் பாதையில் வாழும் மக்கள் போட்டி போட்டு ஏறினர்! நானும் அவர்களில் ஒருவனுக மாறினேன். வான் நடத்துநர் இன்னும் சில நிமிடங்களில் வான் புறப்படுமென அறிவித்துக்கொண்டிருந்தார்! தாளையடியிலிருந்து பருத்தித்துறைக்கு எவ்வளவு காசு எனக் கேட்டுவைத்தேன்! இருபது ரூபாவுக்கு ஆறு ரூபாக் குறைவு என நடத்துநர் ‘ஜோக்’ அடித்தார்

தலையில் ஏதோ பாரம் அழுத்துவதுபோலிருந்தது 19 மைல்கள் பிரயாணம் செய்வதற்கு ரூபா பதினுன்கு கட்டி அழ வேண்டியிருக்கின்றது. சந்திர மண்டலத்தில் பிரயாணம் செய்வதுபோலக் கிடங்கிலும் முடங்கிலும் சகதியிலும் விழுந்து வான் ஓடிக்கொண்டிருந்தது. சுதந்திரமடைந்து முப்பத்தியேழு வருடத்தில் இந்த றோட்டுகளுக்கு இன்னும் விடியவில்லை.

நள்ளிரவில்தான் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது ...

திருச்சிக்கு அருகே புதுக்கோட்டை, அறந்தாங்கி, கட்டுமாவடி, ஆவுடையார் கோவில், ஆழியவளை, அம்மாப்பட்டணம், கோட்டைப் பட்டணம் அமைந்திருக்கிறது. இந்தத் தாளையடி வழியிலே கற்கோவளம், வல்லிபுரம், அம்பன், குடத்தனை, நாகர் கோவில், குடாரப்பு, செம்பியன்பற்று, மருதங்கேணி, வெத்திலைக்கேணி, கட்டைக்காடு, தாளையடி ஆகிய இடங்கள் அமைந்திருக்கின்றன. தமிழ் நாட்டில் ஒரு நாகர்கோயில் கடலோரம் அமைந்திருக்கிறது. இந்த வழியிலும் ஒரு நாகர் கோயில்!

அங்கே ஒரு ஆழியவளை இங்கும் ஒரு ஆழியவளை. பண்பாட்டு ஒற்றுமை அப்படி! இப்படியே சிந்தித்துக்கொண்டு இருந்தபோது வான் கற்கோவளத்தைக் கடந்துவிட்டது.

வானிலிருந்த பக்கத்து நபரை நோட்டமிட்டேன். ‘‘நீங்கள் தாளையடியா?’’ என்று கேட்டுவைத்தேன்.

‘‘இல்லை நான் மயிலிட்டி.’’

‘‘அப்போ ஏன் இந்தப் பாதையால் பிரயாணம் செய்கின்றீர்கள்?’’

‘‘குடாரப்பு என்ற இடத்துக்குக் கருவாடு வாங்கப் போகின்றோம்.’’

‘‘என்ன என்னைக் கேலி பண்ணுகின்றீர்களா?’’

‘‘இல்லை... கடல்வலயச் சட்டத்தால் மயிலிட்டித் துறைமுகம் செயலிழந்துவிட்டது. இதனுல் கருவாடு வாங்குவது என்ருல் குடாரப்புவிற்குத் தான் செல்வோம்’’.

வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்.

ஹெலிகொப்டரும் ஒருநாள் கவசவாகனத்தில் ஏறியது. இந்த நிலைபோன்றதுதான் எம் நிலையும்.

காலத்தின் கோலத்தை நினைத்து என்மனம் ஏங்கியது.

### ஆடு மாடு ஓடினுல்...!

எங்களைத் தாண்டி வல்லிபுரக் கோயில் மறைந்துகொண்டிருந்தது. சற்று அப்பால் ஆடு மாடுகள் தலைதெறிக்க றோட்டைக் கடந்து ஓடின. ‘ட்ரைவ’ வானை மரம் ஒன்றின் பின்னுல் மறைத்துவைத்தார் ஆடு, மாடுகள் ஓடினுல் ஹெலிகொப்டர் வருவதாக அர்த்தமாம்! எப்படி இருக்கின்றது?

ஆம், ஒரு ஹெலிக்கொப்டர் கணநேரத்தில் பதிவாகப் பறந்து மறைந்தது. வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த ஒரு தொழிலாளி என்னுடன் வலியப் பேச்சைத் தொடுத்தார்.

‘‘நீங்கள் இந்த லைனில் ஒரு நாளும் வரக் கண்டதில்லை; இங்கே எங்கு போகின்றீர்கள்?’’ நான் எட்டப்பர் கூட்டத்தில் ஒருவராக இருக்குமோ என்ற சந்தேகம் அவருக்கு!

எனது நோக்கத்தை அவரிடம் சொன்னேன்.

‘‘ஓ... பத்திரிகைக்காரனு? ரொம்ப நல்லது. எங்கடை பொடியன்கள் ஆனையிறவில் இருந்து வந்த ஆமியைக் கட்டைக்காட்டில் சந்தித்துத் திருப்பி அனுப்பினுர்கள். ஒரு யாழ்ப்பாணத்துப் பத்திரிகைக்காரனும் இந்தப்பக்கம் வந்து ஒரு ‘‘றியல் றிப்போட்’’ எடுத்தானு? ஒரு படம் பிடித்தானு? அந்த இடத்திலே மக்கள் படும் துன்பத்தைப் பற்றி ஒரு வசனம் ஆவது எழுதியிருப்பானு?’’ என்று ஒருபோடு போட்டார். நானே பதில் எதுவும் பேசமுடியாது வாய் அடைத்துப் போனேன். உங்கள் பேப்பர்காரங்களுக்கு இனியாவது சொல்லிவையுங்கள் எனச் சொல்லி திக்கம் எஸ் எஸ். கே. சுருட்டைப் பத்தி புகையை வெளியேதள்ளினுர்.

வான் நாகர் கோயிலைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தது... அப்பாடா ஒருமாதிரித் தாளையடியும் வந்துவிட்டது. கடற்கரைக்கு அயலிலே எழில் ஊட்டும் இந்த நகரை இன்றுதான் தரிசிக்கமுடிந்தது.

கடற்கரையில் மீனவர்களை சந்திக்கப்போகுமுன்பு அகதிகளையே முதலில் சந்திக்க முடிந்தது.

தமது சொத்துச் சுகங்களை இழந்து திருகோணமலை, முல்லைத்தீவில் இருந்து மட்டுமல்ல மயிலிட்டி, காங்கேசன்துறை, பலாலி ஆகிய இடங்களில் இருந்தும் மக்கள் இங்கு இடம்பெயர்ந்துவந்து அனலாய்த் துடிக்கிறுர்கள்.

சொந்த மண்ணிலேயே அகதியாகி அவன் அடைக்கலம் தேடிய பூமியாகத்தாளையடி மாறியிருக்கிறது.

இயற்கையுடன் வாழ்ந்தவன் தமிழன். மரங்களின் பெயரால் வழங்கப்படும் நெல்லியடி, ஆலடி, மருதடி நாவலடி, பனங்காமம் என்ற பெயர்கள் இதற்குச் சான்று பகரும்.

அந்தத் தொடரிலே தாழையடியும் அடங்கும்.

அந்தத் தாழையின் நிழலே இந்த அகதித் தாய்மாருக்கும் பிள்ளைகட்கும் இன்று நிழல் தந்துகொண்டிருக்கின்றது.

‘‘கோல்டன் பெசன்ற்’’ என்பது சீனத்தின் ஒரு தேசியப்பறவை. அந்தப் பறவை அடைகாக்கும் காலத்திலே மசக்கைக்குணம் வந்து மண் தின்பதில்லை. தண்ணீர் குடிப்பதில்லை சாப்பிடக்கூட எழுந்து போகாது தாய்மைக்குப் பெருமையளிக்கும் குணம் கொண்டது. அதுபோன்றே இங்கு அகதியாகத் தங்கியிருக்கும் தாய்மார்கள் ‘கோல்டன் பெசனற்’ என்ற சீனப் பறவைபோன்று தம் மழலைகட்கு உணவூட்டுவதைப் பார்த்தால் எமக்கு விடுதலை அதிக தூரத்தில் இல்லைஎன்றே பட்டது

### முதியவர் சொன்ன விபரம்

அகதிமுகாமுக்கு அருகில் இருந்த சிமியோன் என்ற முதியவரிடம் பேச்சுக்கொடுத்தேன். அவர் சற்று இலக்கியம், வரலாறு என்பவற்றைப் படித்திருக்கும் ஆற்றல் அவருடைய பேச்சுமொழியில் இருந்தே புலப்பட்டது அவரிடம் நான் கேட்ட சில கேள்விகளை உங்கள்முன்பு சமர்ப்பிக்கின்றேன்.

கேள்வி: உங்களுக்கு அகதி நிவாரணம், கடல்வலய நிவாரணம் எல்லாம் இருக்குமே? உங்களுக்கு வறுமை வர வாய்ப்பு இல்லையே?

பதில்: தம்பி உனக்கு ஒரு பழமொழி தெரியுமே? அதுகும் பிரண்டேப்பை இதுகும கழண்டேப்பை, என்று இந்தப் பக்கத்தில் ஒரு பழமொழி உண்டு. அதைத்தான் இவையின்ரை நிவாரணச்சட்டம் சொல்லுகுது. எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் மாதம் 220 ரூபா அகதி நிவாரணம் இருக்கின்றது. நான் இப்போதும் அகதிதான் என எழுதிக்கொடுக்க மாதம் ஒருநாள் புலோலி ஏ.ஜி.ஏ கந்தோருக்குப் போகவேண்டும். போக வரச் செலவு ரூபா இருபத்து ஆறு. சாப்பாட்டுச் செலவு வேறு. பின்பு அவர்கள் சொல்லும் நாளில் பெர்மிட் எடுக்கப் போக இன்னொரு செலவு. இதைவிட இந்தப் பெர்மிட்டைக் கொண்டு சாமான் எடுக்கச் சென்ருல் போ, வா என்பதில் ஒரு கிழமை பறக்கும். ‘‘அள்ளுண்டேன், நெருக்குண்டேன், சோறுண்டிலேன்’’ என்ற நிலைமையில்தான் இந்த நிவாரணம் எமக்கு! பருப்பும், அரிசியும், சீனியும் தருகிருர்கள். பிள்ளைக்குப் பால்மா தா என்ருல் பெர்மிட் இல்லைப் போ எனப் பதில் கிடைக்கின்றது.

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### அரசியல் ஈடுபாடு இல்லை

தற்பொழுது இயங்கும் எந்த ஒரு அரசியல் சட்சியுடனும் எதுவித ஈடுபாடும் எமது குழுவுக்குக் கிடையாதென்பதை அறியத் தருகிறோம்.

அமரர் பொன்னம்பலத்தின் அரசியல் நிலையையும், அன்னரின் அரசியல் துறை நடவடிக்கைகளையும், செயற்திறனையும அவருடைய செயல்களிற்கான விளக்கங்களையும் எதிர்பார்த்து ஏற்பட்ட விளைவுகளையும் வரலாற்றுக் கண்ணுடனும் தத்துவ அடிப்படை ரீதியிலும் ஆய்வு செய்ததன் மூலம் இன்றைய இளைஞர்கட்கும் வருஞ் சந்ததியினருக்கும் சிந்தனைத் தெளிவுடன் சமூக அரசியல் அறிவைப் பெறுவதற்கு உதவியாகச் செயல்படுவதே எமது குழுவின் குறிக்கோளாகும்.

ஆர்.என்.சிவப்பிரகாசம்,
தலைவர்,
அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் நூற்குழு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிராமத்து வீதிகளில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கே:- என்னதான் இருந்தாலும் அரசாங்கம் இப்படியும் ஒரு சலுகை செய்கின்றது தானே?

ப:- இந்த இடத்தில்தான் நீங்கள் பெரிய பிழை விடுகிறியள். வெளிநாடு அகதிகட்கு என்று அன்பளிப்புப் பொருட்கள் கொடுக்கிறது அதில் கொஞ்சம்தான் தமிழருக்குக் கிடைக்கிறது. சிங்கள மக்களுக்கு அகதிச் சாமான் கிடைக்குமட்டும் எங்களுக்கும் இது ஒரு கண்துடைப்பு

கே:- உங்களுக்கு இருக்கும் மீன்பிடிக் கஷ்டங்கள் என்ன?

ப:- நாம் ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்வதென்ருல் விளக்கைக் கொழுத்திக் கிணத்துக்கை விழுவது போன்றது. லோரன்ஸ் பைல் என்ற ஒல்லாந்தத் தேசாதிபதி கண்டியைக் கைப்பற்றப் பல சூழ்ச்சிகள் செய்தான் அதுபோல அரசாங்கம் தமிழ் மீனவர்கள் உயிர்களைப் பறிக்கச் சந்தர்ப்பம் தேடித் திரிகின்றது.

இந்த மீனவர், வரலாற்று விளக்கங்கள் அளிக்கிருர். இவரிடம் அதிக விஷயங்கள் எடுக்கலாம் என மீண்டும் கதையைத் தொடங்கினேன்.

கே: சிமியோன் அண்ணை லோரன்ஸ் பைலுக்கும், இலங்கைக் கடற்படைக்கும் என்ன சம்பந்தம்?

லோரன்ஸ் பைல் காலத்தில் கண்டியை ஆண்ட ராஜாவுக்கு லோரன்ஸ் பைல் பரிசுகள் கொடுத்துத் தாஜா பண்ணிருன். வெருட்டிப் பார்த்தான்; படையெடுப்பேன் என்ருன்; பின்பு நானும் நீயும் நண்பன் என்ருன்—கடைசியில் பைலின் கையில் கண்டி ராஜதானி விழுந்தது.

''அப்புறம்?''

அதுபோன்று நாங்கள் தாளையடிக்கு அப்பால் போய்விட்டோம் என்றுகடற்படையினர் பாசாங்கு பண்ணுவர். கரை மறையகப்பலை மறைத்துவிட்டு மறைந்து நிற்பர். பிரபகாரனை ஒழித்துக்கட்டுவோம்; ஆனல் நீங்கள் நல்லபிள்ளையள் என்று வான் மார்க்கமாக நோட்டீஸ் விடுவர். எங்களுக்கும் உங்களுக்கும் என்ன கோபம் என்பர்!

பின்பு—

நாம் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ருல் அர்த்த சாமத்தில் எரிகுண்டுகளை வான்மீது ஏவுவர். கடலே பட்டப்பகலாகக் காட்சிதரும். பின்பு கடலில் மீன்பிடிப்போர் சகலரும் கடலுக்குப் பலியாவர். ''ஓசை ஒலியெல்லாம் ஆனுய் நீயே'' என இறைவனை வணங்கிய தமிழன் இன்று கிழக்குத் திசையில் பீரங்கிக் குழலையே தொழவேண்டிய அராஜக ஆட்சி இன்று நடக்கின்றது.

சிமியோன் மீண்டும் தொடர்ந்து பேசினர். எனது கேள்விகளை எதிர்பாராமலே துன்பத்தைத் தூக்கிவைக்கக்கிடைத்த சிறுவனுக என்னை நினைத்துப் பேசினர். நாம்படும் துன்பங்களை எந்தப் பத்திரிகைக்காரனும் பிரசுரிப்பதில்லை. நாம் பருத்தித்துறை போய் வருவதென்ருல் ரூபா 28/- செலவு. 3 நாட்கள் கரையில் சூடை பிடித்தாலும் இந்தக் காசு பருத்தித்துறை போய் வரக் காணுது ஒருதனுக்கு 'ஷெல்'' விழுந்தால் முருகானந்தத்தின் ஆஸ்பத்திரிக்குப் போக எண்டாலும் ஐந்நூறு ரூபா வேணும் காருக்கு.

கே: சிமியோன் அண்ணை... சரி... அ சரத்திற்கு மக்கள் உதவி செய்யமாட்டார்களா?

ப: தமது வேலைமுடிந்ததும் தலைமறைவாகிவிடும் குணம் மனிதனுக்குப் பிரத்தியேகமானது ஆனல் நாம் இன்றுஉயிர் வாழ்வது என்ருல் ஆபத்துக்கு ஓடிவரும் இந்தப் பொடியன்களால்தான்!

கே: தாளையடியில் வேறு என்ன சீர்திருத்தங்கள தேவை?

ப: இங்கு கள்ளமார்க்கெட்டை ஒழிக்க மக்கள் முயலவேண்டும். பருத்தித்துறையில் பெட்ரோல் லீற்றர் 30 ரூபா என்ருல் இங்கு ரூபா 45க்குக் கள்ளமார்க்கட். அங்கு மண்ணெண்ணெய் லீற்றர் 12 ரூபா என்ருல் இங்கு இருபது ரூபா. அகதிகளிடம் கொள்ளை லாபம் அடிக்கும் நிலையைப் போராளிகள் அகற்ற நியாய விலைக்கடைகள் இவ்விடம் ஏற்படுத்தவேண்டும்.

கே: சிறகுவலை, தூண்டில் வலை இப்படிப் பல மீன்பிடி முறைகள் சொல்லப்படுகின்றதே அவைகளைத் தாளையடியில் பயன்படுத்தமுடியாதா?

ப: தம்பி...நீ ஏட்டில் படித்திருக்கிருய். நாங்கள் கடலில் 'பிறக்ரிஸ்' பண்ணுகிறவர்கள். நீங்கள் சொல்லும்முறை எல்லாம் கடல் ஏரியில்தான் பயன்படுத்தலாம்; இங்கு இயலாது.

கே: கடல் வலயச் சட்டம் தொடர்ந்தால்?

ப: கருவாடு காய வைத்த பூமிகூட மிஞ்சாது.

கே;- ஈழநாடு மூலம் தமிழ் மக்களுக்கு ஏதும் செய்திசொல்வீர்களா?

ப;- ஆம். யேசுபிரான் சொன்னவைகளை எழுதிக் கொள்ளுங்கள்,

பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக் கடவன். பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்கட்கு உதவிசெய்யுங்கள். அந்நியரை உபசரிக்க நாடுங்கள்

விருந்துக்கு ஐஸ்வரியமுள்ள அயலகத்தாரை அழைக்க வேண்டாம். அழைத்தால்அவர்களும் உங்களை அழைப்பார்கள். நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும், சப்பாணிகளையும், அழைப்பாயாக! அப்பொழுது நீ பாக்கியவானுயிருப்பாய். அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள். நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப்பதில் செய்யப்படும்.

ஏழைகள் என்ற இடத்தில் அகதிகளை வைக்குமாறு சிமியோன் கூறுகின்ருர்.

[இன்னும் வரும்]

மூக்கில் விரலை வையுங்கள்!

கூலிங்கத்துப் பரணியில்
கூழுக்கு இலக்கிய அந்தஸ்து

''யாழ். பீச் இன்ஸ்''ஸிலே
கூழுக்குத் தேசிய அந்தஸ்து

வியப்பில்லை, உண்மைதான்!
ஞாயிற்றுக் கிழமையிலே—
நம்மை நாடி வாருங்கள்,
நாம் தருவோம் ''கூழ்''

யாழ். பீச் இன்ஸ்,
பீச் ரோட், யாழ்ப்பாணம்.

# ''பாதுகாப்புத் தேடி மலகூடத்திற்குள் சென்றவர் 'ஷெல்'லுக்குபலி

யாழ்ப்பாணம், செவ்

முகாமிலிருந்து ''ஷெல்'' தாக்குதலின் போது பாதுகாப்புத்தேடி மலகூடத்திற்குள் சென்ற தயாவதியும், புகையிலை உலர்த்தும் கொட்டிலுக்குள் சென்ற அவரது தந்தையும் இரத்தக் காயங்களுடன் கிடந்தார்கள்.

புன்னலைக் கட்டுவனைச் சேர்ந்த ஆ கனகரத்தினம் (46வயது) அவரது மகள் க தயாவதி [17 வயது] ஆகியோரின் மரண விசாரணையில் க. அழகம்மா சாட்சியமளிக்கையில் இவ்வாறு கூறினர்.

யாழ். பதில் நீதிவான் ஏ. அன்ரனி நேற்று முன்தினம் மரண விசாரணை நடாத்தினர்.

அழகம்மா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் ஷெல் தாக்குதல் நடந்த போது பாதுகாப்புத்தேடி தான அடுத்த வீட்டுப் பிளாட்டுக்குக் கீழ் போய் நின்றதாகவும் தன் கணவன் புகையிலைக் கொட்டிலுக்குள்ளும் மகள் தங்கள் வீட்டு மலகூடத்திற்குள் போய் நின்றதாகவும் கூறினர்.

தங்கள் வீட்டில் ஷெல் விழுந்து மேலே புகைகிளம்பியதாகவும் அங்குபோய் பார்த்தபோது கணவனும் மகளும் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும் அயலவர்களின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பியதாகவும் அங்கு இறந்ததாகவும் கூறினர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திப் போடப்பட்டது. (க)

# ''கருப்புசட்டைக்காரர் கொலை செய்ததாக சிறியதந்தை கூறினர்''

## மரணவிசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம் செவ்வாய்

கரைவலை போடச் சென்ற குருநகர் கடற்ருெழிலாளர்களை 'கருப்புச் சட்டைச்காரர் தான் வள்ளத்தில் வந்து கொலை செய்ததாக அங்கிருந்து தப்பி வந்த என் சிறிய தந்தை கூறினர்.

30 குருநகர் கடற்ருெழிலாளர் மரண விசாரணையில் நேற்று சாட்சியமளித்த குருநகரைச் சேர்ந்த பி. ஞேமன் இவ்வாறு கூறினர்.

யாழ். மேல் நீதிமன்ற கட்டடத்தில் யாழ். பதில் நீதவான் கே பி எஸ்.வரதராசா முன்னிலையில் நேற்றுக் காலை மரணவிசாரணை நடைபெற்றது.

இறந்தவர்களின் நலனைக் கவனிக்க சட்டத்தரணிகளான ஆர்.விஸ்வநாதன், ஏ. அன்ரனா எஸ்.கனகசபாபதி, பா.தவபாலன ஆகியோர் ஆஜராஞர்கள்.

பி. ஞேமன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது. என் தகப்பனுருக்குச் சொந்தமான 'தூய ஒளி' என்ற படகில் தான் கரைவலை தொழில் செய்து வருகின்றேன். எனது கரைவலை தொழிலுக்கு 30அல்லது 35 பேர் வரை செல்வார்கள். என் தொழிலுக்குப் பொறுப்பாக பங்கிராஸ் என்பவரை நியமித்திருந்தேன்

இம்மாதம் 10ம் திகதி அதிகாலை 5மணிக்கு குருநகர் துறையிலிருந்து கரைவலை போடத் தீவுப் பகுதிக்குச் 30 பேர் சென்ருர்கள். எல்லோரும் என் உறவினர்கள். அன்று பகல் என்படகில் சென்றவர்கள் இறந்து விட்டதாகவும் மற்ருெரு வள்ளத்தில் சடலங்கள் குருநகருக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அறிந்து அங்கு சென்றேன. 30சடலங்கள் இருந்தன. தப்பி வந்த என் சிறியதகப்பனுரான மரியதாசை சந்தித்த போது கருப்புச் சட்டைக் காரர் தான் கொலை செய்ததாகக் கூறினர்.

விசாரணை நாளை காலை வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது. [க)

# வவனியா வரை ரயில்சேவை நடத்துக

வவனியா, திங்கள்

வடபகுதி ரயில் சேவையினை வவனியாவரை நடாத்தும்படி மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வவனியா கச்சேரியில் நடைபெற்ற புனர் வாழ்வு பற்றிய கூட்டத்தில் மாவட்டப்பிரஜைகள் குழு கூட்டத்தில் டாக்டர் எஸ் வி, பரராஜசிங்கம் கோரிக்கையினை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

# ஆலய வளர்ச்சி முக்கியம்

உடுவில், திங்கள்

''ஆலயங்கள் புனிதமான இடங்களாக இருக்க வேண்டும். நிம்மதி வேண்டி வழிபடும் அடியார்களுக்கு இடைஞ்சல் தருமிடமாக அமையக் கூடாது. ஆலயங்களின்வளர்ச்சியைக் கொண்டுதான் கிராமத்தின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அளவிட முடியும்.''

உடுவில் கிழக்கு கற்பக விஞயகர் ஆலய வருடாந்தக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றிய உடுவில் பகுதி கிராமசேவையாளர் திரு சி. ஆறுமுகம் இவ்வாறு கூறினர்.

ஆலயத்தின் நிர்வாக சபையினராக பின்வருவோர் நடப்பு ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. எஸ். சண்முகநாதன், உபதலைவர்: திரு க. சண்முகம், செயலாளர்; திரு. வே. வன்னியசிங்கம், உபசெயலாளர்: திரு. பொ. கணபதிப்பிள்ளை, தனுதிகாரி: திரு. மு வாகீசர், உபதனுதிகாரி, திரு அ. சிவசம்பு, நிர்வாகஉறுப்பினர்கள்;- சி. கந்தையா, பாலசிங்கம், சி பரராஜசிங்கம், ச. திபாகரராசா ந. சிறிஸ்காந்.

# ''உணவு உற்பத்தியைப் பெருக்க பெண்களின் பங்களிப்பும் தேவை''

பண்டத்தரிப்பு, திங்கள்

''உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு யுவதிகளும் தங்கள் பங்களிப்பை செலுத்த வேண்டும். விவசாயத்துறையில் ஆண்கள் தான் ஈடுபட வேண்டும் என்ற கால கட்டம் இன்று மாற்றமடைந்து பெண்களும்ஈடுபட்டு உழைக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது''

இவ்வாறு பண்ணகம் இளம் விவசாயிகள் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சங்கானை மேற்கு பிரிவு விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திருமதி திலகவதி சிவபாக்கியநாதன் குறிப்பிட்டார்.

பண்ணகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றஇக் கூட்டத்திற்கு கழகத்தலைவி செல்வி. நடராசா தமிழரசி தலைமை தாங்கினர். செல்வி. இரா. அன்புமலர் வரவேற்புரை நிகழ்த்தினர்.

சங்கானை கிழக்கு பயிர் செய்கை உத்தியோகத்தர் திரு. ஜி. சிதம்பரநாதன் மங்கள விளக்கேற்றி தொடக்கவுரை நிகத்துகையில் விவசாய திணைக்களம் வழங்கும் உதவிகளையும் நிவாரணங்களையும் விவசாயிகளில் பலர் அறியாதிருக்கிருர்கள் என்றும், இளம் விவசாயிகள் கழகங்கள் போன்ற அமைப்புக்கள் இது விடயத்தில் விவசாயிகளிடம் தொடர்பு கொண்டு விளக்கங்களை கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (சிவ)

# சாந்திக மஹோற்சவம்

யாழ்ப்பாணம் செவ்

யாழ் வண்ணார்பண்ணை கிழக்கு சந்தர்மடம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் சாந்திக மஹோற்சவம் இன்று கர்மாரம்பம், வாஸ் சாந்தியுடன் ஆரம்பமாகும்

நாளை புதன்கிழமை பகல் 12 மணிக்கு இரக்ஷாயந்னமும் அபிஷேகமும் நடைபெறும்

யூலை 5ந் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும்7ந் திகதி அஷ்டோத்தரசதசங்காபிஷேகமும் நடைபெற்று மாலை திருவுலாக் காட்சி இடம் பெறும்.

உற்சவங்கள் யாவும் தினமும் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் என மேற்படி தேவஸ்தான ப. சோமாஸ்கந்த குருக்கள் தெரிவிக்கின்ருர். [ஐ]

# ஞான வைரவர்க்கு சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம் செவ்

வண்ணை நல்ல தண்ணீர் கிணற்றடி ஸ்ரீ ஞான வயிரவர் சுவாமி கோவில் அஷ்டோத்திர சங்காபிஷேகமும் விநாயகர் சுப்பிரமணிய பரிவார மூர்த்திகளுக்கு ருத்திராபிஷேகமும் விஷேட பூஜையும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவிருக்கின்றது.

# லட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணை அருள்மிகு ஸ்ரீசெந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் லட்சார்ச்சனை கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது இதுதொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறும் தினமும்காலை 7-15 மணிக்கு ஸ்நபனுபிஷேகமும் தொடர்ந்து 8-30 மணிக்கு சந்தனக் காப்புச் சாத்தப்பெற்றஸ்ரீசெந்தில் வேலனுக்கு நியாசபூர்வ ஷண்முகார்ச்சனையும், தீபாராதனையும், மாலை 4-00 மணிக்கு வசந்த மண்டப பூசையும் அதனைத்தொடர்ந்து சண்முகார்ச்சனையும் தீபாராதனையும் நடைபெற்று சுவாமி உள்வீதி வலம்வருதலுமிடம்பெறும்.

# பொங்கல் விழா

யாழ்ப்பாணம் செவ

வட்டுக் கிழக்கு, கலைநகர் புராட்டிவளவு ஞான வைரவர் வைகாசிப் பொங்கல் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது இவ் விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக வட்டு இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு வ யோகானந்தசிவம் அவர்களின் ''நாயன்மார் காட்டிய அன்பு நெறி'' என்னும் சொற்பொழிவு இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொருட்காட்சிகள்

# மாணவரின் கல்விக்கு மிக முக்கியமானதாகும்"

யாழ்ப்பாணம், செவ்வாய்

"பாடசாலைகளில் நடாத்தப்படுகின்ற பொருட்காட்சிகள் மாணவர்களின் கல்விக்கு மிகவும் முக்கியமானதாகும். பாடத்திட்டத்துக்கு அமைவான பொருட்காட்சிகள் மாணவர்களுக்குப் பெரிதும் உதவுகின்றன"

இவ்வாறு யாழ். சனசரத்தின மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கல்விப் பொருட்காட்சியை பங்களை விளக்கேற்றித் திறந்துவைத்துப் பேசும்போது யாழ் கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

மேற்படி வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் பொருட்காட்சி நடைபெற்றது.

கல்விப்பணிப்பாளர் மேலும் கூறியதாவது;- "எந்தவிதமான சூழ்நிலை நிலவினாலும் மாணவர்கள் தமது மூலதனமான கல்வியை தொடர்ந்து கற்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும். பொருட்காட்சி ஒருவிசயத்தினை மிகவும் எளிதாக விளங்கிக்கொள்ள உதவுகிறது. பொருட்காட்சிக்கு மாணவர்களுடன் பெற்றோர்களும் சேர்ந்துகொள்வதனால் மாணவர்களும், பெற்றோர்களும் பலன் பெறுகின்றார்கள்.

பொருட்காட்சியில் விஞ்ஞானப் பிரிவில் இருந்த எலக்ரோனிக் காட்சி அறையும், பயோகாஸ் நிலையமும், கலாச்சாரமண்டபமும், வர்த்தகப் பிரிவும் எல்லோரினதும் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன. (ஐ)

# "கல்விச் செல்வத்தை பாதுகாக்க வேண்டும்"

உடுவில், திங்கள்.

குழந்தைகளின் உள்ளம் மிகவும் தூய்மையானது. அத்தகைய உள்ளங்களில் நல்ல பண்புகள் பழக்கங்களை வளர்ப்பதன் மூலம் நாட்டில் நற்பிரசைகளை உருவாக்க முடியும். எமது தமிழ் சமுதாயம் இன்றைய பல இன்னல்களையும் சமாளித்து எதிர்கால சந்ததியை வளாத்தெடுக்கும் பணியைமேற்கொண்டுள்ளது. இப்பணியில் சகல பெற்றோர்களும், ஆசிரியர்களும் பங்கேற்று செயல் டவேண்டும்"

இவவாறு உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கி உரைநிகழ்த்திய உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிஙகம் கூறினார்

உடுவில் கல்வி முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னாள் யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு. பி எஸ் குமாரசாமி தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்ட மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு எஸ் தனஞ்செயன் தமது உரையில்:- "குழந்தைகளின் கல்விச்செல்வத்தை அழியாது பாதுகாக்கவேண்டும்" என்றூர். உடுவில்பகுதி கிராம சேவையாளர் திரு சி ஆறுமுகம், உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய அதிபர் திரு. சு. நடராசா, பண்டிதர் திரு. இராசையா உட்பட பலரும் உரையாற்றினர்.

# இன்று கல்விப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம் செவ்வாய்

வண்ணார்பண்ணை இளைய தம்பி இந்து வித்தியாலயத்தில் இன்றுகாலை கல்விப் பொருடகாட்சி நடைபெறும்.

நல்லூர் வட்டாரக்கல்வியதிகாரி சு. சிவமூர்த்தி இப் பொருட்காட்சியை ஆரம்பித்து வைப்பார். தொழில்நுட்ப வட்டாரக் கல்வியதிகாரி எஸ். சுப்பிரமணியம் விஞ்ஞான வட்டாரக் கல்வியதிகாரி எஸ். நடராசா, யாழ. இந்துக்கல்லூரி அதிபர் எஸ் பொன்னம்பலம், பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் எஸ். சிவபாலசிங்கம். கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். பஞ்சலிங்கம் ஆகியோர் விசேட மதிப்பீட்டாளர்களாகக் கலந்து கொள்வார்கள்.

மிகத் திறமையான ஆக்கங்களைப்படைத்த மாணவர்களுக்கு சாந்தி அச்சகத்தின் சார்பில் உரிமையாளரின் பாரியார் திருமதி நாகரத்தினம் பரிசில்களை வழங்குவார். (க)

# மதிய போசன விருந்து

யாழ்ப்பாணம், செவ்வாய்

காரைநகர் கலாநிதி ஆ தியாகராசா ம. ம. வி. மதிய போசன விருந்து இன்று கல்லூரிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதமவிருந்தினராக விக்ரொறியா கல்லூரி அதிபர் திரு.எஸ்.அருணாசலம் கலந்துகொள்வார்.


## பிரயாண ஒழுங்குகள்
### டென்மார்க்

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)

(25-ம் திகதி எமது முகவர் கூட்டிச் செல்வார்.)
எமது கார்ரியாலயத்தில் பதிவு செய்தவர்கள்
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

★ லிபியா ★ குவைத்
★ சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.

அத்துடன்

பாஸ்போட், BOND, ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

## யூனிவேர்சல் ஏஜென்சி,

125, (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில்
பெற்ரேலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

(C 2991)


ஐக்கிய நாணயசங்கம்——

# "அபிவிருத்திக்கு நிதிவழங்கும் நிறுவனமாக அமைய வேண்டும்"

யாழ்ப்பாணம், செவ்வாய்

"இன்றையகாலகட்டத்தில் எமது பகுதிகளின் சகல விதமான அபிவிருத்தி வேலைகளுக்கும் நிதி உதவி வழங்கும் உறுதியான நிதி நிறுவனமாக ஐக்கிய நாணய சங்கங்கள் கட்டி எழுப்பப்படவேண்டும்'

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஐக்கிய நாணய சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களுக்கானகருத்தரங்கில் உரையாற்றிய வீடமைப்பு அதிகார சபை யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. பூ. முருகையா இவ்வாறு கூறினர்.

சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம், தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு.கே கோபாலரட்ணம் ஆகியோர் மங்களவிளக்கேற்றி கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்கள்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில்திரு பூ முருகையா மேலும் பேசுகையில் கூறியதாவது;

"ஏழை மக்கள் இலங்கை வங்கியிலோ, மக்கள் வங்கியிலோ கடன் பெற்று தங்கள் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வது சுலபமான காரியமல்ல. ஐக்கிய நாணய சங்கக் கிளை நலல நோக்கங்களோடு ஆரம்பித்து அதைச் செயல்படுத்தவேண்டும்.

ஐ நாணய சங்கங்கள் பரவலாக அமைக்கப்பட்டு அவை வீடமைப்புக்கடன்கள் வழங்குவதைத்தனது ஒரு வேலையாகக் கொள்ள வேண்டுமே தவிர இக்கடனுக்காக மட்டும் நாணய சங்கங்கள் அமைக்கப்படுவதாக இருக்கக் கூடாது.

"வீடுகள் கட்டுவதற்கு கடன் பெறுவதிலும், வழங்குவதிலும் எவ்வளவு அக்கறை காட்டப்படுகிறதோ, அதே அளவு அக்கறை பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதிலும் காட்டவேண்டும்என்றும் கேட்டுக் கொண்டார்

சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்த உதவி ஆணையாளர் திரு கே. சண்முகலிங்கம் பேசுகையில்: "வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களின் வீடமைப்புத் தேவைகளைப்பூர்த்தியாக்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவு செயற்படும் விதத்திலேயே ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு விஸ்தரிக்கப்படும். "கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாவற்றிலும் அங்கத்தவர்களின் கண்காணிப்பு அவசியமாகிறது. கூட்டுறவில் நேர்மையைக்கடைப்பிடிக்க வேண்டும்" என்றூர்.

மேலதிய அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் தலைமை உரையில் "தற்போதய நாட்டின் நிலையில் வங்கிகள், நிதி நிறுவனங்கள் இயங்க முடியா திருப்பதினால் ஐ நாணய சங்கங்கள் கிராம மட்டத்தில் சேவை ஆற்றுவதற்கு முன்வரவேண்டும் என்று கூறினர்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு எஸ்.வேலாயுதபிள்ளை ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத் தலைவர், திரு கே. சுப்பிரமணியம், தேசிய கூட்டுறவு சபை செயலாளர் திரு. க கணேசலிங்கம் ஆகியோருடன் மற்றும் பலர் உரையாற்றினர்கள். (வா]

# இன்றைய இராசி பலன்

மாதம்- ஆனி
திகதி: 10 (1986-6-24)
கிழமை- செவ்வாய்.
திதி- திருதியை
பி. இ. வரை.
நக்ஷத்திரம்- உத்தராடம்
மு.இ வரை.

மேடம்: நல்லதைச் செய்வீர்கள் நலன் பெருகும். வாழ்க்கை இன்று குதூகலமாக இருக்கும். பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றம் காணப்படும். சுபதினம்.

இடபம்: சிறிய விடயத்திற்குக்கூட குறை கேட்க நேரிடும். சமூகப்பார்வை வட்டமிடும். உடல் நலமும் பாதிக்கப்படலாம் ஆத்திர உணர்ச்சியை அடக்கவும்

மிதுனம்: இதயம் இன்பத்தால் விம்மும். கண்ணியமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவார்கள். நீண்டநாள் எதிர்பார்த்த பயணமும் இன்று கைகூடலாம். தொழில் துறையிலும் ஆர்வம் பிறக்கும்.

கடகம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். பூமிப்பிணக்கும் தோன்றலாம். தொழிலிலும் மந்த நிலை காணப்படும். எவ்விடயத்தையும் ஆலோசித்துச் செயல்படுத்தவும்.

சிங்கம்: பிதாவழிப் பெருமையுண்டு குடும்பத்திலும் அமைதி நிலவும். புண்ணிய யாத்திரை ஒன்றுக்கும் வழி பிறக்கலாம். சுமாரானதினம்.

கன்னி: தொழில் முன்னேற்றமுண்டு தொல்லைகள் நிவர்த்தியுண்டு. சுற்றுடலிலும் ஆதரவ கிடைக்கும். இடமாற்றத்திற்கும் இடமுண்டு

துலாம்: வாழ்க்கையில் புதிய அபிலிருத்தி காணப்படும். வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும். வியாபாரிகளும் அதிக முன்னேற்றமடைவர். நன்னாள்.

விருச்சிகம்: வாகனம் செலுத்துவோர் அதிக கவனம் செலுத்தவும். குடும்பத்திலும் பிளவுகள் தோன்றலாம் ஏமாற்றத்திற்கு இடமுண்டு. எதிலும் மனத்திடம் வேண்டும்.

தனுசு: ஆணவப் போக்கினால் அடிசறுக்க நேரிடும். கடமையிலும் சேர்வு தென்படும். இனிக்கப் பேசுவோர் விடயத்தில் நிதானம் அவசியம். அமைதி நன்று

மகரம்: மனம் நிறைந்த வாழ்வு. கல்வி கற்போர் முன்னேற்றம் காண்பர். தொழிலும் சிறக்கும். அரசியல் வாதிகள் போற்றப்படுவர். மகிழ்ச்சிகரமான தினம்.

கும்பம்: நினைவின் நிழலாட்டம் வேதனையைத் தரலாம். உள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றிமறையலாம். கல்வியில் மந்தநிலையும் உண்டாம். தெய்வ வழிபாடு நன்று.

மீனம்: மாதுரு வழிச்சந்தோஷம் கிட்டுப. முந்தான சந்திப்பு இன்று கிட்டும். வரவிலும் [illegible] வாகன நலமும் உண்டு.

திருமலை ரவீந்திரன்

# "நிர்வாகத்திறமை நிரம்பப்பெற்றவர்"

சாவகச்சேரி, திங்கள்

"நிர்வாகத்திறமையும், கடமையுணர்ச்சியும் நிரம்பப் பெற்றிருந்த இவ்வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அமரர் த காசிநாதன், தனது வித்தியாலயத்தினை முன்னேற்றப்பாடுபட்டதுடன், தென்மராட்சிப்பகுதியில் இருக்கின்ற ஏனைய கல்வி ஸ்தாபனங்களையும், ஆசிரியர் தொழிற்சங்கத்தையும் வளர்ப்பதில் முன்னின்று பாடுபட்டவராவார்."

இவ்வாறு சாவகச்சேரி கல்வி வட்டார அதிகாரி திரு. அ. தங்கராசா, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் பாடசாலை அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடுசெய்யப்பட்ட, அமரர் காசிநாதன் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் திரு எஸ் கணேசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ தங்கராசா, வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அமரர் த. காசிநாதனின் திருவுருவப்படத்தினைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இலங்கை பனம் பொருள் அபிவிருதிச்சபையின் தலைவர் திரு க. நடராசா, ஆயுர்வேத டாக்டர் பே. பிலிப்ஸ் உதவி அதிபர் திரு கே. தம்பையா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள். செயலாளர் திரு எஸ். எம். அருளம்பலம் நன்றி கூறினர். (க)

# "உணவுப் பற்றுக்குறைநீக்க சிறுபயிர்ச் செய்கையில் ஈடுபடல் வேண்டும்"

பண்டத்தரிப்பு, திங்கள்.

"இன்றைய கால கட்டத்தில் எமது பிரதேச மக்கள் எதிர் நோக்கும் உணவுப் பற்றுக்குறையை நீக்குவதற்கு குரக்கன், திணை, சாமி, மரவள்ளி போன்ற சிறு பயிர்ச் செய்கையில் எமது விவசாயிகள் ஈடுபடவேண்டும். உற்பத்தியை பெருக்குவதே தட்டுப்பாட்டை நீக்குவதற்கு வழியாகும்."

இவ்வாறு சங்கானை கிழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவில் இடம் பெற்ற விவசாயக்குழுக்களின் அங்குரார்ப்பண பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ். பிரதேச பயிர்க்காப்புறுதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவகுரு குறிப்பிட்டார். சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு சங்கானை கிழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ஜி. சிதம்பரநாதன் தலைமை தாங்கினர்.

திரு சிவகுரு அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கடந்த ஆண்டில் யாழ். மாவட்டத்தில் பயிரழிவு ஏற்பட்ட விவசாயிகளுக்கு காப்புறுதி நஷ்டஈடாக சுமார் எட்டு லட்சம் ரூபாவை வழங்கசிபார்சு செய்யப்பட்டுள்ளது. இப்பணம் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படவிருப்பதாகவும் வெங்காயம், மிளகாய் ஆகிய உப உணவுப் பயிர்களுக்கும் விவசாயிகள் பயிர்க்காப்புறுதி செய்யும் பட்சத்தில் அதற்கான நஷ்டஈட்டை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்

ஓய்வு பெற்ற விவசாய திணைக்கள பொருளியல் போசிரியர் திரு எஸ். சதாசிவம் பிள்ளை உரையாற்றுகையில் "பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குத் அத்தியாவசியமான விதைகள், உரம், கிருமிநாசினி போன்ற

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உலகக்கிண்ண' உதைபந்தாட்டம்:

# ஆர்ஜன்டீனா, பிரான்ஸ், மே. ஜெர்மனி, பெல்ஜியம்

## அரை இறுதி ஆட்டத்துக்குத் தெரிவு

மெக்ஸிக்கோ, ஜூன்-23 மெக்ஸிக்கோவில் நடைபெறும் 'உலகக் கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்திற்கு ஆர்ஜன்ரீனா, பெல்ஜியம், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் தெரிவாகியுள்ளன.

ஆர்ஜன்ரீனாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் ஆர்ஜன்ரீனா 2—1 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. இவ்விரு கோல்களையும் ஆர்ஜன்ரீனாவின் காப்டன் மறடோனா போட்டார். இங்கிலாந்து ஆட்டம் முடிவடைவதற்கு ஐந்து நிமிடங்கள் இருக்கும்போது தனது கோலைப் போட்டது.

பெல்ஜியத்துக்கும் ஸ்பெஜினுக்குமிடையில் நடைபெற்ற ஆட்டம் 'வெற்றி தோல்வி' யின்றி [1—1] முடிவடைந்ததைத் தொடர்ந்து நடைபெற்ற 'பெனால்டி பிறேக்' உதையில் பெல்ஜியம் 5 கோல்களையும், ஸ்பெஜின் 4 கோல்களையும் போட்டமையால் பெல்ஜியம் 'அரை இறுதி' யாட்டத்திற்கு விளையாடத் தெரிவானது.

### அரை இறுதி ஆட்டங்கள்

அரை இறுதி யாட்டங்கள் நாளை நடைபெறவிருக்கின்றது.

இப்போட்டியில் ஆர்ஜன்ரீனாவை எதிர்த்து பெல்ஜியமும், பிரான்ஸை எதிர்த்து மேற்கு ஜெர்மனியும் விளையாடவுள்ளன.

இப்போட்டியில் வெற்றி பெறும் கோஷ்டிகள் இறுதி ஆட்டத்துக்கு விளையாடத் தகுதிபெறும். தோல்வியடையும் கோஷ்டிகள் 3-வது இடத்துக்கு விளையாடும்.

3-வது இடத்துக்கான ஆட்டம் 28ம் திகதியும், இறுதியாட்டம் 29ம் திகதியும் நடைபெறும். [வி]

## வர்த்தகவியல் தராதர பரீட்சை

உடுவில், திங்கள்.

இலங்கை பரீட்சைத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தகவியல் தராதரப்பத்திரத்திற்கான பரீட்சை இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி முதல் நடைபெறும். இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 27ம் திகதி வரை பரீட்சை ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு, கண்டி, குருநாகல், பதுளை, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் பரீட்சை நடைபெறும்.

சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திரம், க. பொ. த. (சாதாரண) பரீட்சைகளில் சித்தியடைந்தோர் இப்பரீட்சைக்கு தோற்றமுடியும்,

## மூடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் நீதிமன்றங்களுக்குச் செல்வதற்காக முதலாம் குறுக்குத்தெருவில் திறக்கப்பட்டிருந்த புதிய பாதை நேற்றுக்காலை மூடப்பட்டிருந்தது.

நீதிமன்றங்களிற்கு நேற்றுக்காலை வந்த சட்டத்தரணிகளும் கட்சிக்காரர்களும் ஊழியர்களும் புதிய பாதை மூடப்பட்டிருந்ததனால் கோட்டைப் பக்கமாகவுள்ள பிரதான வாயில் வழியாக நீதிமன்றத்திற்கு வந்தனர்.

புதிய பாதை வாசலில் உள்ள இரு தகரக் கதவுகளும் பூட்டு ஒன்றினால் பூட்டப்பட்டிருந்தது. இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (க)

சாவகச்சேரி நகராட்சிமன்றம்

ஆதனவரி அறிவித்தல்

1986ம் ஆண்டு 2ம் கந்தாயத்துக்குரிய ஆதன வரியை 30-6-86ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பு இக் காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் இத்திகதிக்குப்பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும்(15%) ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20%) கூடுதலாகச்சேர்த்து அறவிடப்படு மென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஆதனவரி செலுத்தப்படாத வெற்றுக்காணிகளைச் சுவீகரிப்பதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆகவே காணி உரிமையாளர்கள் உடனடியாகச் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

த. நவரத்தினராசா.
செயலாளர்,

நகராட்சி மன்ற
அலுவலகம்,
சாவகச்சேரி. (A-865)

அடுத்த ஆண்டு முதல்

# கிராமப்புற பாடசாலை மாணவர்க்கு நகர்ப்புற அனுமதியில் கட்டுப்பாடு

## வடமாநில கல்விப்பணிப்பாளர் திட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

''வடபகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் பாடநூல்கள் போதாமையாலும் எமக்கு வருகின்ற பணஉதவிகள் திசைதிரும்பி வேறு இடங்களுக்கு செல்வதாலும் கிராமப்புற பாடசாலைகளை பெற்றோர்கள் புறக்கணித்து நகரப்புற பாடசாலைகளில் மோகம் அதிகரிப்பதால் எமது கல்வித்தரம் பின்தங்கிய நிலையிலுள்ளது.''

இவ்வாறு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநில கல்வியதிகாரி திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலும் ஓர் பாடசாலை அமைக்கப்பட்டு அங்கு எல்லா பிரிவு (கலை, விஞ்ஞான, வர்த்தக) வகுப்புகளும் நடாத்தப்படும். இதற்குரிய சகல நடவடிக்கைகளும் நாம் எடுப்போம். இதனால் அடுத்த ஆண்டுமுதல் கிராமப்புற பாடசாலை மாணவர்கள் இவ்வாறான பாடசாலைகளிலேயே தங்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கு ஏற்பாடுசெய்யப்படும். இவர்கள் எவ்வித காரணம்கொண்டும் நகர்ப்புற பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தற்போது அரசாங்கம் சேர்க்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ள அதேநேரம் இளைப்பாறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாயுள்ளது. இளைப்பாறுவோருக்கு அதிகளவு ஓய்வூதியம் கிடைப்பதே இதற்கு காரணம் என நம்புகிறேன். இவ்வாறான நிலைமைகள் இருந்தும் சேர்க்கப்படும் ஆசிரியர்கள் பலரை கல்வியில் பின்தங்கிய பகுதிகளுக்கு அனுப்பிவருகிறேன் மேலும் தமிழ்ப்பகுதி கல்வி முன்னேற்றத்திற்கு என்னாலான முழு உதவிகளையும் நல்குவேன்'' என்று கூறினார்.

வரவேற்புரை நிகழ்த்திய கல்லூரி அதிபர் திரு. கே.கே. நடராஜா இக்கல்லூரி கடந்த வருடங்களில் பல சிறந்த மாணவர்களை உருவாக்கியுள்ளது- சென்ற வருட க. பொ. த. (சா/த) பரீட்சையில் இக் கல்லூரி மாணவர் ஒருவர் ஏழு அதிவிசேட சித்திபெற்று யாழ் முன்னணி பாடசாலைகளின் கல்வித்தரத்துடன் எமது பாடசாலையும் விளங்கிவரும் அதேவேளை இங்கு பலவருடங்களாக நடைபெற்று வந்த க.பொ.த. (உ/த) விஞ்ஞான வகுப்புகள் தற்போது நிற்பாட்டப்பட்டுள்ளது. இதனால் சித்தியடைந்த பல திறமைசாலி மாணவர்கள் வேறு கல்லூரிகளை நாடவேண்டியுள்ளது.

இக்கல்லூரியில் உயர்தர விஞ்ஞான வகுப்பை தொடர்ந்து நடாத்துவதற்கு மீண்டும் அனுமதி வழங்கவேண்டும்

(8ட் பக்கம் பார்க்க)

## அஞ்சலி

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறாது தாக்குதலில் ஈடுபட்டிருந்த சமயம் வீர மரணமடைந்த தமிழ் ஈழ இராணுவத்தின் மட்டக்களப்புத் தளபதியான சற்குணத்திற்கு [மைனா] கண்ணீர் அஞ்சலி செலுத்தி யாழ். கொட்டடி மக்கள் பிரசுரமொன்றினை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 21 ம்திகதிஇராணுவத்தினரின் வெளியேற்றத்தைத் தடுத்து அவர்களை பின்னடையச் செய்யும் வேளையிலேயே குண்டு பட்டுச் சற்குணம் வீர மரணமடைந்தார் என்றும் அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சற்குணத்தின் மறைவு குறித்து யாழ்நகரில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. [ஐ]

## தந்தை செல்வா பெயரில் சனசமூக நிலையம்

அராலி திங்கள்

தந்தை செல்வா பெயரில் சனசமூக நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

அராலி வடக்கு செல்வா வீதியில் உள்ள மக்களே இச் சனசமூக நிலையத்தை உருவாக்குவதற்கு முன் வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

## கத்தோலிக்க...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதிற்கு யாழ். பல்கலைக் கழக கத்தோலிக்க மாணவ ஒன்றியம் கடுமையாகக் கண்டனம் தெரிவிப்பதுடன் இவரது இழப்பினால் துயருறும் சகலமக்களிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபதைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகக் கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, அண்மைக் காலமாக இவ்வாறான கொடூரமான சம்பவங்கள் நடைபெற்று வருவதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறாக இழந்து போன எம் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இம்மாதம் 26 ம் திகதி வியாழக்கிழமை மாலை சந்தியோமையர் தேவாலயத்தில் ஓர் சிறப்புவழிபாடு யாழ். பல்கலைக் கழகக் கத்தோலிக்க மாணவ ஒன்றியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [து]

வெலிங்டன்

10-30, 2-30, 6-15

மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த

விதி

(கலர் - புதிய பிரதி)

லிடோ

காலை 1 0-30, 2-30, 6-30

கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த

தாயில்லாமல் நானில்லை

(கலர்)

## பருத்தித்துறையில் நோயாளர் நலன்புரி சங்கம்

புலோலி, திங்கள்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரிச் சங்கம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். கே. லலித்குமார் மேற்கொண்டுள்ளார்

இன்று செவ்வாய்க்கிழமை இந் நோயாளர் நலன்புரி சங்கத்தை அமைப்பதற்கான கூட்டம் வைத்தியசாலை விரிவுரைமண்டபத்தில் இடம் பெறுமெனவும் சகல பொது நல ஸ்தாபனங்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுபயிர்ச்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வற்றை கொள்வனவு செய்து சகாயவிலையில் தட்டுப்பாடு எதுவுமின்டி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.'' என்றார்,

சங்கானை கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. ஆ. முருகேசு உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். விவசாயக் குழுக்களுக்கான உறுப்பினர் தெரிவும் நடை பெற்றது.

## மெய்வல்லுநர் போட்டி

பண்டத்தரிப்பு, திங்கள்

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளின் முதலாவது வருடாந்த மெய்வல்லுநர் போட்டி கொத்தணி அதிபர் திரு. என். வேலுப்பிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார், வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வியதிகாரி திரு. ப. சண்முகராசாவும் இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். 15 பாடசாலைகள் கலந்துகொண்ட இப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிக புள்ளிகளைப் [illegible] தைப் பெற்றது. [illegible]

பதவி வெற்றிடம்

கணக்காளர் — தரம் 104/10

(அ) தகைமைகள்: 06 பாடங்களில் க. பொ. த. (சாதாரண) சித்தி. எண்கணிதம் / கணிதம் / வர்த்தக எண்கணிதம், தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தி அல்லது கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம் / க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்கியல் தொடர்பான துறையில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

(ஆ) சம்பளம்: 104/10 — 350 — 615

15X7 — 20X8

(இ) விண்ணப்ப முடிவு திகதியில் 25 வயதுக்கும் 40 வயதுக்கும் மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 07-07-1986.

(ஈ) விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தினால் தயாரிக்கப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
கோண்டாவில் — இணுவில்
தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,
கோண்டாவில்.

(சங்கப் பணியாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

(C 3048)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 24-6-86

## இலங்கைத் தமிழர் விவகாரம்:

# இந்தியா ஒரு மூன்றுவது நபர்போல் இருக்க முடியாது

### — எல். கே. அத்வானி

புதுடில்லி, திங்கள்

''இலங்கையிலுள்ள தமிழ் சகோதரர்களின் நலன்களில் இந்தியாவுக்கு அக்கறை இருப்பதனுல் அவர்கள் விஷயத்தில் இந்தியா ஒரு மூன்றுவது மனிதரைப்போல் அக்கறையில்லாமல் நடந்துகொள்ளமுடியாது என பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வாணிகூறியுள்ளார்.

இன்று சென்னையில் பத்திரிகையாளரிடம் இதனைத் தெரிவித்த அவர் தொடர்ந்து''தமிழர்பிரச்னைக்கு ராணுவத் தீர்வொன்றையே காணஇலங்கை ஜனுதிபதி திரு. ஜயவர்த்தன முடிவெடுத்திருப்பது தெரிகிறது. இந்நிலையில் எழக்கூடிய மிகச்சிரமமான சூழ்நிலையை சமாளிக்க உருப்படியான வழிமுறைகளை இலங்கைத் தமிழர் நலனில் அக்கறைகொண்ட அனைவரும் உருவாக்க வேண்டும் அத்துடன் ஐக்கிய இலங்கையென்ற அமைப்பின் கீழேயே இலங்கைப் பிரச்னையைத் தீர்க்க இந்தியாபாடுபட வேண்டும்'' எனக்கேட்டுக் கொண்டார்.

இலங்கைத் தமிழர் விஷயத்தில் இந்தியா ஒரு மத்தியஸ்தரைப் போலன்று அக்கறையுள்ள ஒரு தரப்பாக தன்னைப்பாவித்துக் கொள்ள வேண்டுமெனவும் அவர் கூறினுர். (செ)

## நாவற்குழி தாக்குதல் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம் செவ்வாய்

நாவற்குழி இராணுவமுகாமிலிருந்து நேற்றுக் காலை வெளியே வந்த படையினருக்கும்போராளிகளுக்குமிடையில் நடந்த நேரடி மோதலில் சில இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மற்றும் சிலர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தைதொடர்ந்து முகாமிலிருந்து நடந்த ஷெல் தாக்குதலில் நாவற்குழி சந்திக்கருகில் நின்ற வேலணையைச் சேர்ந்த எஸ். பரமேஸ்வரன் (35 வயது) தலையில் காயமடைந்தார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியற்பிரிவு வெளியிட்டஅறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

நேற்றுக்காலை 11 மணியளவில் நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நடை பவனியாக சுமார் 125 இராணுவத்தினர் கைதடி சந்தியை அண்மித்தபோது எமதுவீரர்கள் நேரடிமோதலைத் தொடுத்தனர். இத்தாக்குதலின் போது சில இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், சில இராணுவத்தினர் காயப்பட்டனர். பலியாயகி இராணுவத்தினர் ஒருவரின் பெயர் சுமணபாலவாகும். எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை.

## மாணவரவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம் செவ்வாய்

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி 18 மாதங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் யாராவது உயர்நீதிமன்றத்திலுல் இன்றுவரை வழக்குதாக்கல் செய்தியாருந்தால்பெயர், விலாசம், பாதுகாவலர் பெயர் கைதான திகதி, முகாம்களின் விபரமும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலப்போன்றவிபரங்களுடன் நேரடியாகவோ அல்லது கடிதமூலமோ ''மாணவரவை'' யாழ். பல்கலைக்கழகம் என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## தீவுப் பகுதியில் மலேரியா நோய் பரவும் அபாயம்

வேலணை திங்கள்

தீவுப் பகுதியில் மலேரியா நோய்பரவும் அறிகுறிகள் தென்படுகின்றன. இவ்வித நோய்களுக்கு ஆளானவர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சைபெற்றுவருகின்றுர்கள்.

தீவுப்பகுதி எங்கும் கொடிய வரட்சி நிலவிவருகின்றபோதிலும் நுளம்புகளின் தொல்லைகளும் அதிகரித்துள்ளன.

இவ்விதம் அதிகரித்துவரும் மலேரிய நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் நுளம்புகளை ஒழித்துக்கட்டுவதற்கும் சுகாதாரப் பகுதியினர் உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென தீவுப் பகுதி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### மீண்டும் ஒரு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யிடப்பட்ட நிலையில் கரை தட்டியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாச்சிக்குடாவில் நேற்றுமாலைவரை இரு ஆண்களின் சடலங்களும், பூநகரியில் கல்முனை என்ற இடத்தில் மேலும் இரு ஆண்களின் சடலங்களும் கரை ஒதுங்கியிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பகுதியிலும் நேற்று கொழும்புத்துறை மணியந்தோட்டம் கடற்கரையில் பெண்ணெருவரின் சடலம் கரை ஒதுங்கியிருக்கக் காணப்பட்டது. அத்துடன் யாழ். கடற்கரைவீதி, பழைய பூங்கா வீதி ஆகியன சந்திக்கும் கடற்கரையிலும் நேற்று மாலை ஆண் ஒருவரின் சடலம் கரைசேர்ந்தது. இவ்விரு சடலங்களும் மிகவும் சீர்குலைந்த நிலையில் கிடக்கக் காணப்பட்டன. அத்துடன் இவை மீது துப்பாக்கிவேட்டுத் துவாரங்களின் அடையாளங்களும் இருந்தன.

கடந்த சனிக்கிழமை இந்தியாவுக்கு குருநகரிலிருந்துஅகதிகளாகச் சென்றஇவர்கள் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, வல்வெட்டித்துறைஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. [கி-வி]

### தொண்டமா...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இதுவரை காலமும் இந்த முகாமில் இருந்து கிழக்குப் பக்கமாகவே 'ஷெல்'கள் ஏவப்பட்டு வந்தன இப்பொழுது மக்கள் நெருக்கமாக வாழும் தென்புற பகுதிகளான தம்பாலை. இடைக்காடு, வளலாய் வருணன், கதிரிப்பாய், பத்தைமேனி ஆகிய பகுதிகளை நோக்கியும் 'ஷெல்'கள் ஏவப்படுகின்றன. 'ஷெல்' தாக்குதல் இரவிலும், பகலிலும் இடம் பெறுவதால் இப்பகுதிப் பொதுமக்கள் பதட்டமடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

அத்துடன் மேற்குறிப்பிட்ட பகுதிகள் பெருமளவு உப உணவு உற்பத்தியாளர்களையும் தோட்ட நிலங்களையும் கொண்டுள்ளதாக இருப்பதால் 'ஷெல்' தாக்குதலின் அச்சம் காரணமாக வழமையான தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

# டெஸ்ட் தொடரில் இந்தியா வெற்றி

லண்டன் ஜூன் 23

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டித்தொடரில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது. லீட்ஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாவது டெஸ்டின் 4 வது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்துக் கோஷ்டி இரண்டாவது இன்னிங்ஸில் 128 ஓட்டங்களை மட்டும் எடுத்து ஆட்டத்தை இழந்தது

இந்தியா அணியின் கஸ்டன் கபில்தேவ் மகிந்தர்சிங் ஆகியோரின் அபார பந்து வீச்சினுல் இங்கிலாந்து அணியினர்நிலைகுலைந்து போனுர்கள்.

இந்திய அணியில், மகிந்தர் சிங் 4 விக்கட்டுகளையும் கவில் தேவும், ரூேஜல் பின்னியும் தலா 2 விக்கட்டுகளையும் ரவி சாஸ்திரி 1 விக்கட்டையும் எடுத்தனர்.

ஸ்கோர் விபரம் வருமாறு: இந்தியா முதலாவது இன்னிங்ஸில், 272ஓட்டங்கள்இரண்டா இன்னிங்ஸில் 237 ஓட்டங்களையும் எடுத்திருந்தது. இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 102 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 128 ஓட்டங்களையும் எடுத்திருந்தது. [வா]

## ஊழியர்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் செவ்வாய்

விஸ்வமடு றெட்பானுவிற்கு அருகாமையில் வைத்து இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட எமது ஸ்தாபனத்துக்குச் சொந்தமான 6 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை மீட்டுத்தருமாறு புனித இயக்கங்களுக்கு எஸ். வி.எம். ஸ்தாபன ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார் அந்த வேண்டுகோளில் மேலும்கூறப்பட்டிருப்பதாவது: இதனுல் ஊழியர்களாகிய நாங்கள் தான் நடுவீதியில் நிற்கும்நிலை ஏற்படும். இந்தஸ்தாபனத்தை நம்பி சுமார் 125 ஊழியர்கள் இருக்கிறுர்கள். இதைக் கூடிய சீக்கிரம் மீட்டுத் தருவீர்கள் என்ற அசையாத நம்பிக்கையுடன் ஆறுதல் அடைகின்றேம்.

### நன்நடத்தை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில், அண்மைக்காலமாக வசாவிளானிலிருந்து இடம் பெயர்ந்த அகதிகள் முகாமிட்டிருந்தனர்.

இராணுவத்தினர் இக்கட்டிடத்தில் முகாமிடக் கூடும் என்ற காரணத்தினுலேயேஇக் கட்டிடம் தகர்க்கப்பட்டதாக அறியவருகிறது.

### சர்வகட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு' வெளியீட்டில் தமிழ்க் காங்கிரஸ்கட்சி, சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றுவதென முடிவு செய்தது குறித்த செய்திவெளியாகியிருந்தது. இதனைத்தொடர்ந்தே திரு. கனகநாயகம் இதுகுறித்து அதிர்ச்சியும், கவலையும் வெளியிட்டுள்ளார்.

''அ. இ. த. காங்கிரஸின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. குமார்பொன்னம்பலம் கட்சி அங்கத்தவர்களை கலந்தாலோசிக்காமல் சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றுவதென முடிவுசெய்துள்ளார். இது ஒரு தன்னிச்சையான முடிவாகும்.''

கடந்த சில மாதங்களாக அரச முப்படையினர் தமிழ் மக்களைக் கொன்று சித்திரவதை செய்தும் உடமைகளைச் சேதப்படுத்தியும் வருவது யாவரும் அறிந்ததே. ஜனுதிபதிக்கு இதுகுறித்து முறைப்பாடுகள் செய்தும் அவர் இது பற்றி எதுவித நிவாரணமும் வழங்காது தொடர்ந்து இக்கொடூர சம்பவங்களை அனுமதித்து வருகிறுர் இக்கட்டத்தில் இந்த சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றுவதை ஒரு சமூக விரோத செயலென்றே கருதவேண்டியுள்ளது. எனவே இம்மகாநாட்டில் பங்குபற்ற வேண்டாம்'' என்று திரு. கனகநாயகம் அவசரதந்தி மூலம் திரு. குமார் பொன்னம்பலத்தைக் கேட்டுள்ளார்.

### கிராமப்புற

(7ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கேட்டுக்கொண்டார்.

இவ்விழாவில் வட்டாரக் கல்வியதிகாரி திரு எஸ். சண்முகராஜாவும் சிறப்புரையாற்றினுர். இறுதியில் ஆசிரியர் திரு அ தியாகராசா நன்றி கூறினுர். (சிவ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

### நாவற்குழி..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இம்மாதம் 19ம், 20ம் திகதிகளில் ஹெலிகொப்டர் மூலம் கொண்டு வந்து நாவற்குழி முகாமில் குவிக்கப்பட்ட கறுப்புச்சட்டைக்காரர்களும் இராணுவமும் சேர்ந்து தமது தாக்குதலை தொடரும் நோக்கில் எமது மக்களின் பிரதேசத்திற்குள் நூற்றுக்கணக்கில் நேற்று வெளியே வந்தனர்.

இவர்களை எமது பிரதேசத்திற்குள் மேலும் முன்னேற விடாது மக்கள் வீடுதலைப் படை வீரர்கள் மோட்டார் 'ஷெல்' தாக்குதலை தொடர்ந்தனர் ஈடு கொடுக்க முடியாத நிலையில் முகாமிற்குள் திரும்பிய படையினர் உள்ளிருந்து 'ஷெல்' தாக்குதலை நடாத்தினர். மேலும் தொடர்ந்து அவர்களை துரத்திச்சென்ற மக்கள் விடுலலைப் படைப் போராளிகள் நாவற்குழி முகாமிற்கு மிக அண்மையில்நிலை கொண்டு மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலினுல் பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் இறந்ததாகக் தகவல் கிடைத்துள்ளது. இத்தாக்குதலின் போது முக்கிய பங்கு வகித்த மக்கள் விடுதலைப்படை வீரரான தோழர் ரஞ்சன் (சி. கணேசதாஸ் - மட்டுவில்) ஈழ மக்களுக்காகப் போராடி வீர மரணடைந்தார்.

கௌரப்பிரஜையாக களத்திலே மரித்த எங்கள் தோழனுக்கு வீரவணக்கத்தைச் செலுத்துகிறேம். (க)

## மரண அறிவித்தல்

### திரு. ச. செந்தில்நாதன்

இருபாலையை பிறப்பிடமாகக் கொண்டவரும், மண்கும்பான் பிள்ளையார் கோவிலடியில் வசித்தவருமான ச. செந்தில்நாதன் அகாலமரணமாகிவிட்டார். இவர் சற்குணதேவியின் அன்புக்கணவரும் சயந்தன், பார்த்தீபன், சரவணன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். ஈமக்கிரியைகள் 24-6-86 மண்கும்பானில் நடைபெறும்.

பிள்ளையார்கோவில்,
மண்கும்பான்,
வேலணை.

தகவல்:
ச. சண்முகநாதக்குருக்கள்.
(C3049)

### நாகலிங்கம் பொன்னுத்துரை
(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறிய இலங்கை கடற்படை [சிவில்பிரிவு] உத்தியோகத்தரும், விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற க. நாகலிங்கம் தம்பதியினரின் புத்திரரும், காலஞ்சென்ற தம்பிமுத்து தம்பதிகளின் [மலேசியா] அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசரத்தினம் [மலேசிய] தங்கராசா [மலேசியா] தியாகராசா [திருகோணமலை] கனகரத்தினம் [சவூதிஅரேபியா] யோகேஸ்வரி, சிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி தி. அன்னலஷ்மி திருமதி க. கனகநாயகி, திருமதி சி. கமலாதேவி, ம. இராசையா, கனகரத்தினம் [மலேசியா] துரைசிங்கம் [மலேசியா] தனசெல்வம் [மலேசியா] திரவியம் [மலேசியா] குணவதி [மலேசியா] ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்வி ந. மீராவின் அன்புப் பெரிய தகப்பனும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று [24-6-1986] பிற்பகல் 2 மணியளவில் அன்னரது இல்லத்தில் நடைபெற்று திருவடிநிலை குடும்ப மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொன்னுத்துரை விக்கினேஸ்வரி.
அம்மன் வீதி, பண்டத்தரிப்பு
[3062]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org